விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (08.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

## கொள்கை மாறுபட்டாலும் மரியாதை அளிக்க வேண்டும்



### சஜித் சந்திப்பு குறித்து கோத்தபாய விளக்கம்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தொடர்பாக மாறுக் கருத்துக்கள் ▷23

ஜனாதிபதித் தேர்தலில்

## சமல் ராஜபக்ஷ போட்டியிடவில்லை

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் சார்பில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை.
கோத்தபாய ராஜ ▷23

## பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி தொடர்பாக

### இன்று அறிவிக்கப்படும் சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)
பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி குறித்த அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என அறிவித்துள்ளது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. ▷23

## வெற்றி நிச்சயம்

### மகிந்த சூளுரை

(கொழும்பு)
தேர்தலில் வெற்றியை நிச்சயம் கைப்பற்றுவோம் என முன்னாள் ஜனாதிபதி ▷23

ரயில் ஊழியர்களின்

## போராட்டம் முடிவுற்றது

(கொழும்பு)
ரயில்வே ஊழியர்களின் 12 நாள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டது.
ஜனாதிபதி. போக்கு ▷23

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைக

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அழைப்பு

(கொழும்பு)
தொழில்நுட்ப வளர்ச்சியில் புத்துயிர் பெற்ற தாய் நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக கூடியிருந்த ஏராளமான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை அனைவரதும் ஆதரவுடன் வெற்றி கொள்வோம்

### கோத்தபாய நம்பிக்கை வெளியீடு

(கொழும்பு)
அனைவரது ஆதரவுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி பெறுவேன் எனவும் இம்முறை தேர்தலில் நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை முன்னெடுப்பார்கள் என தான் நம்புவதாகவும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இதுவரையில் எழுந்த அனைத்து சவால்களையும் சட்ட வாயிலாகவே வெற்றி கொண்டுள்ளோம். ▷23

## ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டி

### இருவர் தமிழர்கள்

(கொழும்பு)
நாட்டின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவினால் வெளியிடப்பட்டுள்ளது.
கட்டுப்பணம் செலுத்திய ஆறு வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகி ▷23

## நீராவியடி பிள்ளையார் ஆலயம் தொடர்பான வழக்கு

### நீதிமன்றத்தால் தள்ளுபடி

(வவுனியா)
முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தொடர்பாக முல்லைத்தீவு நீதவானால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிரான மேன் ▷23

## ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வர இடமளிக்கப் போவதில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
மக்களின் வயிற்றில் அடித்த ராஜபக்ஷக்களுக்கு மீண்டும் அதிகாரத்துக்கு வர இடமளிக்கப் போவதில்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நேற்று முன்தினம் ▷23

7 நாட்களுக்கு

## பேரணிகள் நடத்தத் தடை

### மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)
வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினமான நேற்று முதல் 7 நாட் ▷23

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்

## சிவாஜிலிங்கத்துக்கு எதிராக ரெலோ அமைப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக களமிறங்கும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரான எம்.கே. ▷23

## அரசியல் கட்சிகளுடனான சந்திப்பு நேற்றும் நடைபெற்றது

### மாவை, சிறீதரன், சித்தார்த்தன் பங்கேற்கவில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்திற்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பு நேற்று இரண்டாவது தடவையாக நடைபெற்றது.
திருநெல்வேலி ▷23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான வெறுக்கத்தக்க பேச்சுக்களை தவிர்க்கவும்

## மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு) போலியான செய்திகள், வெறுக்கத்தக்க பேச்சுக்கள் என்பவற்றை தவிர்த்துக்கொள்வதன் மூலம் ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்த முடியும் எனத் தெரிவித்த சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, அனைத்து வேட்பாளர்களுக்



கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட்டால் மாத்திரமே சுதந்திரமான தேர்தலை நடத்த முடியும்.

அந்த உரிமையையும் சுதந்திரத்தையும் நாம் அனைவருக்கும் வழங்கியிருக்கின்றோம். தமது கருத்துக்களை கூறுவதற்கு இருக்கின்ற உரிமை ஏனையவர்கள் அவர்களது கருத்துக்களை கூறுவதற்கும் இருக்கிறது என்பதை அனைத்து வேட்பாளர்களிடமும் தெரிவித்திருக்கின்றோம்.

ஏனையவர்களுக்கு கவலையை ஏற்படுத்தாத வகையில் தேர்தல் இடம்பெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் ஏனையவர்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும். தனக்கு இருக்கும் உரிமை ஏனைய வேட்பாளர்களுக்கும் இருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ம-3)


## கேக் ஐசிங் வகுப்புக்கள்



☆ கேக் தயாரிக்கும் முறைகள்
☆ பட்டர் பேஸ்ட் ஐசிங் முறைகள்
☆ Fondant ஐசிங் முறைகள்
☆ மாச்சீனி மலர்கள் தயாரித்தல்
இன்னும் பல....

சான்றிதழுடன் கூடிய 15 வகுப்புக்கள் கொண்ட பயிற்சித் தொடர் ஆரம்பம்

**15.10.2019** செவ்வாய் மாலை 3 மணி

தூரிகை நுண்கலை வளாகம் நெல்லியடி

இயக்குநர் – தூரிகை 0779143171

(C-7818)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் விஸ்வநாதன் சண்முகநாதன்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோகராணி கமலநாதன் அவர்களின் பாசமிகு மாமனார்

**அமரர் விஸ்வநாதன் சண்முகநாதன்** (570)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்
யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.


கோடீபதி கஜ்ஜரா

சீட்டிழுப்பு வாரம்: 504 திகதி 06.10.2019 ஞாயிறு

வர்ணம் மஞ்சள்

Z 19 36 51 76

40705

அடுத்த சுப்பர் ஜக்பொட் 142, 680, 033/=

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.


நாமும் நமக்கோர் கற்க — நலியாக் கலையுடையோம் கசடற

## ராகஸ்வரம் கலைமன்றத்தின் கலை, கல்வி வகுப்புக்கள்

வித்தை சிறக்கும் விஜயதசமி தினமாகிய 08.10.2019 செவ்வாய்க் கிழமை இன்று மாலை 3 மணிக்கு யாழ். பஸ்தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் உள்ள **CSLMRD - இல 261/2** மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது. உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

**துணைப்பாடங்கள்**
- ஓகன்
- ஆர்மோனியம்
- ஒக்டோபாட்
- றம்ஸ்
- கொங்கட்றம்ஸ்
- கிற்றார்
- மிருதங்கம்
- தபேலா
- வயலின்
- வீணை
- புல்லாங்குழல்
- வாய்ப்பாட்டு
- நடனம்
- ஓவியம்

**சிறப்புப்பாடங்கள்**
- முரண்பாட்டு நிலைமாற்ற கற்கைநெறி
- புகைப்படக்கலை
- சிங்களம்
- ஆங்கிலம்
- ஊடகவியல்
- ஆயுர்வேத மருத்துவம்
- யோகாசனம்
- நாடகமும் அரங்கியலும்
- தரம் 01 - 04 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி
- தரம் 05 – 10 வரையான மாணவர்களுக்கானதமிழ்,கணிதம்,ஆங்கிலம், விஞ்ஞானம், கணனி வகுப்புக்கள்
- G.C.E. O/L மாணவர்களுக்கான சகல பாடங்களும் துறைசார்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

**CSLMRD** (இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்)

261/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல - 0776510375, 0762963944

(C-7807)


## பழைமை வாய்ந்த ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7815)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



## மணமகள் தேவை

85, ரோகிணி, 8 செவ்வாய், 34 பாவம், வெளிநாடு சிற்றிசன் உள்ள மணமகனிற்கு மணமகள் தேவை.

துர்க்கா திருமண சேவை
0778185978, 0750111122

(571)


## கம்சப்பிரியா இசைக்கல்லூரி

**இல.30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை , யாழ்ப்பாணம்.**

**பதிவு இல – வடமா / க.அ / பண்/ யாழ் /2015 /02**

விஜயதசமி நாள் வகுப்புக்கள் கீழ்வரும் பாடங்களிற்கு (08.10.2019) இன்று மாலை 5 மணி தொடக்கம் 8 மணிவரை நடைபெறும். புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

- வீணை
- வயலின்
- ஓர்கன்
- வாய்ப்பாட்டு
- புல்லாங்குழல்
- ஹார்மோனியம்
- கிற்றார்

– நிர்வாகி

(367)

## யாழ்.மத்திய கல்லூரி JCC EDU CARE TRUST

### விசேட புலமைப்பரிசில் திட்டம் - 2019
### தரம் 6 மாணவர் அனுமதி - 2020

மத்தியின் "கல்விக் காப்பு அறக்கட்டளை" ஆனது எமது பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிக்காகப் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றினை வழங்க உள்ளது.

இத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் (ஆண்கள்) விண்ணப்பிக்க முடியும்.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் திட்டம் கிடைக்காத மாணவர்களும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர்.


**விண்ணப்பிக்கும் முறை :**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறப்பட்ட அல்லது தரம் 06 அனுமதிக்கான பொது விண்ணப்பப்படிவம் ஒன்றினை பூரணமாக நிரப்பி விண்ணப்பப்படிவம் மற்றும் கடித உறை என்பவற்றின் இடது மேல் மூலையில் "புலமைப்பரிசில் திட்டம் - 2019" எனக்குறிப்பிட்டு 30.11.2019ற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

**முகவரி : அதிபர், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(568)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. தங்கராசா ஜெபதாஸ் SLPS -3
(B.A,B.Ed, Med(R), Dip.in.HRM (merit), DSM, Dip.in.Mng)

எமது பாடசாலையின் அதிபர் **திரு.தங்கராசா ஜெபதாஸ்** அவர்கள் 02.10.2019 முதல் இலங்கை அதிபர் சேவை வ்குப்பு 3 இல் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல உயர்வுகளைப்பெற இறைவனை வேண்டுகின்றோம்.


(C-7813)

பாடசாலைச் சமூகம்
கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க பாடசாலை. பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த அணியால் நேற்று

# தேர்தல் செயலகத்தில் குழப்ப நிலை கலகம் அடக்கும் படையினர் குவிப்பு!




(கொழும்பு)
கொழும்பு தேர்தல் செயலகப் பகுதியில் நேற்றுக்காலை குழப்ப நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது.

தேர்தல் செயலகத்துக்குள் தம்மை அனுமதிக்குமாறு கோரி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட தரப்பினருடன் அவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

இதனால் குறித்த பகுதியில் கலகம் அடக்கும் படையினர் குவிக்கப்பட்டனர். (இ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் அமிர்தநாதன் அடைக்கலம்



கிளி/இரணைதீவு றோ.க.வித்தியாலயத்தின் அதிபர் திரு.அமிர்தநாதன் றொபேட் கெனடி அவர்களது அன்புத்தாயார் அமரர் அமிர்தநாதன் அடைக்கலம் அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்

(C-7817)

# கரிபியன் பிரிமியர் லீக் இறுதிக்குள் கயானா அணி

கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடரின் இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதி போட்டியில் ,கயானா அமேசோன் வோரியஸ் அணி, வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதி போட்டியில் கயானா அமேசோன் வோரியஸ் அணியும், பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தி கயானா அசோன் வோரியஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.இப்போட்டியின் ஆட்டநாயகனாக அபார சதம் விளாசிய பிரெண்டன் கிங் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் கயானா அமேசோன் வோரியஸ் அணி, நாளை நடைபெறும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# ராஜபக்ஸவின் ருத்ர தாண்டவத்தால் ரி-20 தொடரை இலங்கை தனதாக்கியது

## பாகிஸ்தான் சொந்த மண்ணில் வீழ்ந்தது

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது 20-20 போட்டியில் இலங்கை அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இதனால் தொடரை இலங்கை அணி 2-0 என கைப்பற்றியுள்ளது

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை அணி ஒருநாள் தொடரை இழந்திருந்த நிலையில் அவ் வணிக்கு எதிராக தற்போது 20-20 தொடரில் விளையாடி வருகின்றது.

இந்த தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றிருந்த நிலையில் நேற்று (திங்கட்கிழமை) லாகூரில் இரண்டாவது 20-20 போட்டி நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து களமிறங்கியது.

அதன்படி பானுக ராஜபக்ஷ, ஷெஹன் ஜெயசூரிய ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டம் காரணமாக 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களை பெற்றுக்கொணடது.

இலங்கை அணி சார்பாக பானுக ராஜபக்ஷ 77 ஓட்டங்களையும் ஷெஹன் ஜெயசூரிய 34 ஓட்டங்களையும் அணித் தலைவர் தசுன் சானக ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார் பாக இமாட் வசிம், வஹாப் ரியாஸ் மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தியிருந்தனர்.

இதனை தொடர்ந்து 183 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 147 ஓட்டங்களை மட்டுமே பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

.அவ்வணி சார்பாக இமாட் வசீம் 47 ஓட்டங்களையும் ஆசீப் அலி 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் நுவான் பிரதீப் 4 விக்கெடகளையும் வமிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.



# ஒசாகா,ஜோகோவிச் சம்பியன்



ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச், ஜப்பான் நாட்டு வீராங்கனை நவோமி ஓசாகா சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென் றனர்.

ஜப்பான் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி டோக்கியோவில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் 'நம்பர் ஒன்' வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஜான் மில்மானை (ஆஸ்திரேலியா) தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். ஜப்பான் ஓபனில் அறிமுகம் ஆன முதலாவது ஆண்டிலேயே பிரமாதப் படுத்தியுள்ள ஜோகோவிச்சுக்கு ரூ.2கோடி பரிசுத்தொகையும், 500 தரவரிசை புள் ளிகளும் கிடைத்தது. மொத்தத்தில் இது அவரது 76-வது சர்வதேச பட்டமாகும்.

இதே போல் பீஜிங்கில் நடந்த சீன ஓபன் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நம்பர் ஒன் வீராங்கனை ஆஷ்லி பார்டியும் (ஆஸ்திரேலியா), 4-ம் நிலை வீராங்கனை நவோமி ஒசாகாவும் (ஜப்பான்) பலப் பரீட்சையில் இறங்கினர். 1 மணி 50 நிமிடங்கள் நீடித்த இந்த மோதலில் ஓசாகா 3-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று பட்டத்தை வென்றார். இது அவரது 5-வது சர்வதேச பட்டமாகும். வாகை சூடிய அவர் ரூ.10 கோடி பரிசுத்தொகையையும், ஆயிரம் தரவரிசை புள்ளிகளையும் பெற்றார். இதன் ஆண்கள் பிரிவில் ஆஸ்திரியா வீரர் டொமினிக் திம் 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் ஸ்டெபானோஸ் சிட்சிபாசை (கிரீஸ்) போராடி வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியில்லாத ஒரு சமுதாயத்தில் ஜனநாயகத்தை கேட்பது வேரில்லாத மரத்தில் கனி கேட்பது போன்றதாகும்

## வடக்கு ஆளுநர் ராகவன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகம் வளரவேண்டுமெனில் உண்மையான நீதியும் நியாயமும் இருத்தல் நன்று. நீதியும் நியாயமும் இல்லாத ஒரு சமுதாயத்தில் ஜனநாயகத்தை கேட்பது வேரில்லாத மரத்தில் கனிகேட்பது போன்றதாகும் என ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.



வீதிப்பாதுகாப்பு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு ஆளுநர் தலைமையில் நேற்றுக் காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளுநரின் செயலாளர், அரச அதிகாரிகள் மற்றும் வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் , மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் , வடமாகாண வீதிர் பாதுகாப்பு சபையின் பிரதானி பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆளுநர் செயலக அலுவலர்கள் இணைந்து வடமாகாணத்தின் பாதுகாப்பிற்கு நாங்களும் பொறுப்பு என்ற கருப்பொருளில் ,

"நான் வீதியில் பயணம் செய்யும் வேளையில் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடித்து. செயறப்பட்டு விபத்துக்களால் ஏற்படக்கூடிய இறப்பு மற்றும் காயங்களினால் ஏனையவர்களுக்கு இழைக்கப்படக்கூடிய துன்பம் இழப்பு மற்றும் அநீதிக்கெதிராகப் போராடும் என்னுடைய திடசங்கற்பத்தை பிரதிபலிப்பேன் என்று உறுதி எடுத்துக் கொள்கின்றேன்" என்று உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு இதன்போது இடம்பெற்றது.

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக ஆளுநரின் வழிநடத்தலில் இந்த வீதிப் பாதுகாப்பு வார நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிகழ்வு அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது.

அத்துடன் ஆளுநர் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து இந்த நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் பலூன் பறக்க விடப்பட்டதுடன் வீதிப்பாதுகாப்பு வாரத்திற்கான தொப்பி ஆளுநரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை மேலும் சிறப்பிக்கும் வகையில் வீதிகளில் பாதுகாப்பிற்காக வைக்கப்படவுள்ள மாதிரி பொலிஸ் உத்தியோகத்தர் உருவம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் சுஜீவா சிவதாஸால் வீதிப் பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது.






இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பேருந்து தரிப்பிடம் மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களில் வீதிப் பாதுகாப்பு வாரம் தொடர்பிலான விழிப்புணர்வு வீதி நாடகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வீதிப்பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு வடமாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்கள் தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபவனி இடம்பெறவுள்ளது. (இ)


யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் தீர்த்தத்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

ஹரன் வெல்டிங் வேக்ஸ்
உரிமையாயர் செ.ஜெயராஜ்
சகல இரும்பு, பித்தளை, ஒட்டு வேலைகள், கேற், கிறில் வேலைகள் செய்து கொடுக்கப்படும்
339, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

L சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
Reg No.DS882
இல.281C, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8004, 070 301 5004

நியூ SK போன் சொப் அன்ட் இன்ஸ்ரிரியூட்
கையடக்கத் தொலைபேசிகள் திருத்தும் பாடநெறிகள் ஆரம்பம்
➢தொலைபேசி திருத்துதல் (Mobile Repairing)
➢தொலைபேசி மென்பொருள் (Mobile Software மற்றும் வன்பொருள் (Hardware)
➢மேலதிகமாக செயன்முறைப் பயிற்சிகள் 2 மாதம் கடைகளில் வழங்கப்படும்.
CLOCK TOWER ROAD, JAFFNA.
தொடர்புகளுக்கு: 077 962 8690, 077 400 7568

Techno World
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2020,2021 – தொழில்நுட்பப்பிரி

பெருமாளின் அருளை வேண்டுகின்றோம்
HJ ஹரன் ஜூவல்லர்ஸ்
நகை-வைர வியாபாரிகள்
021 222 6083
071 418 2480
217, மின்சார நிலைய வீதி,
Skype: Jfharan
email: haranjewellers@gmail.com

PC PARADISE
Laptop Repair
Computer Sales & Repair
Clock Tower Road, Jaffna.
021 222 9579, 077 630 5290

Tip Top Rich
Textiles & Garments
டிப் டொப் ரிச்
T.P: 021 567 0650


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லூர் சிவன் ஆலயத்தில் சாரதா நவராத்திரியை முன்னிட்டு சண்டீஹோம விழாவில் 9 ஆம் நாள் அம்பிகையை குமாரீ ரூபமாகவும் சுவாஸினி ரூபமாகவும் வழிபடும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இன்று மாலை 5 மணியளவில் மானம்பூ உற்சவம் இடம்பெறும். (படங்கள்- ஐ. சிவசாந்தன்)

## மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வி ,பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுமதியுடன் ரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தால் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையில் 4 பிரிவுகளாக நடத்தப்படும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி பல பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க நாளை மறுதினம் 9 ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டது.

இப் போட்டி தொடர்பான அறிவித்தல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் வலய மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களினூடாக ஏற்கனவே வழங்கப்பட்டது. விரும்பிய மாணவர்கள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்ற முடியும் என்பதுடன் பாடசாலை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படும்.

இப் போட்டியானது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள ஒரேயொரு சர்வதேச சமூக சேவை கழகமாகிய றோட்டறிக் குடும்பத்தை சேர்ந்த யாழ். பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தினால்,இலங்கையில் றோட்டறக்ட் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படுகிறது.இது தொடர்பான மேலதிக விபரங்களை 075 401 1013 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது joymathavan2013@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும். (இ)

## மானிய உரம் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கமக்காரர் அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரம் (சாவகச்சேரி) புத்தூர்சந்தி கமநல சேவை நிலையத்தில் நாளை 9 ஆம் திகதி புதன் கிழமை வழங்கப்படும்.

அடையாள அட்டையுடன் பதிவு செய்த விவசாயிகள் மானிய உரத்தை பெற்றுக்கொள்ள அடையாள அட்டையுடன் வருமாறு கமக்கார அமைப்பின் தலைவர் சு.பூபாலசிங்கம் அறிவித்தார். (இ-5-29)

## வாழை வெட்டு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய வன்னி வாழை வெட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி கண்ணகியம்மன் வீதி உலாவந்து சங்கரத்தை ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெறும். (இ-5)

# ஒருவரின் பெயரின் அதிர்ஷ்டம்

## பெண்களும் பெயரும்

**அதிர்ஷ்ட சோதிடம்**

ஒரு பெண்ணின் வளர்ச்சிக்கு அவளின் பெயர்தான் காரணமாக இருக்கிறது. பெரும்பாலும் பெண்களுக்கு கடவுள்களின் பெயர்களையே சூட்டியிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அந்தப் பெயர் பொருத்தமாக இருக்கிறதா? என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

பத்மாவதி,தனலட்சுமி வரலட்சுமி என்றெல்லாம் கடவுளின் பெயரை வைத்திருந்தாலும் கூட அந்தப் பெயர் அவர்களுக்கு சிறப்பைத் தந்ததில்லை. காரணம், கடவுள்களே கணவனோடும் பிள்ளைகளோடும் ஒற்றுமையாகச் சண்டை சச்சரவில்லாமல் சேர்ந்து வாழ்ந்ததாக புராணங்கள் கூறவில்லை.

ஆக, ஒரு பெண்ணுக்கு பெயர் சூட்டுவதற்கு முன்னால், ஏற்கனவே அந்தப் பெயருடைய பெண்கள் சகல வழிகளிலும் முன்னேறி இருக்கிறார்களா? என்று உற்று நோக்கி சகல பாக்கியங்களையும் பெற்றவர்களின் பெயரை வைத்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக இந்து மதத்தில் அச்சர நாமத்தில் பெயர் சூட்டுங்கள் என்று பஞ்சாங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேயே நமது நாட்டுப் பெண்களுக்கு பெயர் சூட்ட முனையும் போது சரியானதொரு பெயரை, வளமானதொரு பெயரை நம்மால் சூட்ட முடியாமல் போய்விடுகிறது.

உதாரணமாக...லா,லி,லு,லே என்று ஒரு நான்கு எழுத்துக்குள் பெயர்களை சூட்ட வேண்டுமென்று திணித்து விடுகிறார்கள். இந்த நான்கு எழுத்துக்களால் துன்பப்படுகிற பலமில்லாத பெயர்களை சூட்டுகின்ற நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம்.

அப்படி அச்சர நாமத்தில் பெயர் சூட்டப்படுவதன் மூலமாக நாம் வெற்றி பெற்று விடுவோம் என்று எண்ணுவதெல்லாம் தவறு.தமிழர்கள் மற்றும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்களைத் தவிர இந்த உலகத்தில் வேறு எவரேனும் நட்சத்திர பெயர்படி பெயர் சூட்டுவதுண்டா? இல்லை.

அப்படி நட்சத்திர எழுத்துக்களில் நல்ல பெயர்கள் வருகிறதா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அந்த எழுத்துக்களில் நல்ல பெயர் அமைந்துவிட்டால் அந்தப் பெயரை அந்தப் பெண்ணுக்குச் சூட்டுவதில் தவறேதும் இல்லை! பெயரிலேயே நலமிகு வாழ்வின் ஆதாரம் இருக்கிறது. மருத்துவ உலகிற்கு புரியாத நோய்களைக் கூட பெயரியல் மாற்றத்தினால் குணமாக்கிவிடலாம்!

பொருந்தாத பெயரொலிக் கலவை பிறரை எட்டும்போது இதயத்தைத் தொடாமல் இன்ப விளைவிற்கு மாறான பலனை உடனே ஏற்படுத்தும் .

ஆண்டுகள் கடந்தால் அதே பெயரொலி மன அழுத்தம், நிலை குலைத்தல், சிந்தனை சிதறல் இவற்றைத் தந்து பெயரை உடையவர்களை அலைக்கழித்து துன்பத்தில் தள்ளி விடும்.

பொருந்தாத பெயர் இடியாக விழுந்து இதயத்தை தாக்கும் வல்லமை பெற்றது. இதன் பாதிப்பில் வாழ்க்கை திசை மாறி வேதனையும் பிரச்சினைகளுமே மிஞ்சும்.

## இராசி பலன்

**மீனம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், அதிர்ஷ்டகரமான நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம்,புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்,கௌரவமான நாள்.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்,புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தில் நிதானம் தேவை,உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**கும்பம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் நலன் கருதிய சுப செலவுகள் இடம்பெறலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின சந்திப்பு இடம் பெறலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**மகரம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல் நலன் சீராகும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**இராசி பலன்**

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | | | |
| சந் | | | |
| சனி, கேது | குரு | புத, சுக் | சூரி, செவ் |

சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்

**08.10.2019**

புரட்டாதி 21,செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி பிற்பகல் 5.39 மணிவரை
திருவோணம் முன்னிரவு 11.29 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
கேதார கௌரி விரதாரம்பம்,
விஜயதசமி, திருப்பதி தேர்

வளவன்

**தனுசு:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் செயற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாள் கனவு நிறைவேறலாம், போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532


## புலமை கல்வி நிறுவனம்

சோதிவேம்படி லேன், மானிப்பாய்.
(சத்திய சாயி பாடசாலையிலிருந்து 100m தூரத்தில்)

புதிய புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
08.10.2019 செவ்வாய்க்கிழமை
(விஜயதசமியன்று)

ஆசிரியர்: திரு.க.கலாமோகன்
(B.A, PGDE, DIP.IN.TEACH)
தரம்:- 05 (தற்போது தரம்-4) பிரிவு - III
நேரம்:- 4.00 மணி p.m
தரம்:- 04 (தற்போது தரம்-3)
நேரம்:- 5.00 மணி
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு முந்தவும்.
தொடர்பு இல:- 077 212 1915
(547)




கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் வாணி விழா கடந்த சனிக்கிழமை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

04.10.2019 இல் தேசிய கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் குரு-பிரதீபா- பிரபா விருதினை பெற்றுக்கொண்ட எமது அதிபர் மற்றும் ஆசிரியப் பெரும் தகைகளை வாழ்த்துவதுடன் ஆசிரியர் தினமான இந்நநாளில் எமது பாடசாலை ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.



எம் கல்லூரி அதிபர்
திருமதி.வாசுகி தவபாலன் SLPS-1
B.Sc.(Hons), PGDE. MED, M.Phil, PGDEM



பகுதித் தலைவர் (உயர்தரப் பிரிவு)
திருமதி.தேவமனோகரி உருத்திரசிங்கம்
Dip.in.Music



விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்
திரு.நா. மதியழகன்
(Dip.in.P.E, Trd Physical Edu, BA)
(கலாவித்தகர், வில்லிசை மாமணி, வில்லிசைத் தென்றல்)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
(7809)


## வட்டு. இந்துக் கல்லூரியின் 125வது வருட நிறைவு நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு இந்துக்கல்லூரியின் 125 ஆவது வருட நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்ககான ஆசியுரையை வீணாகான குருபீட தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் வழங்கவுள்ளதோடு பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு 125 ஆவது வருட நிறைவு மலர் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா வழங்குவார். (இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.அருணாசலம் ரங்கன்
SLTS-1



தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், கொடிகாமம், சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் தேசிய கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் திரு.அருணாசலம் ரங்கன் அவர்கள் சிறந்த ஆசிரியருக்கான "குருபிரதீபா பிரபா" விருதினை 04.10.2019 அன்று பெற்றுக்கொண்டதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டுவதோடு அவர் மேலும் பல சாதனைகளைப் புரிந்து உயர்வு பெற வாழ்த்துகிறோம்.

மீசாலை (C-7811) குடும்பத்தினர்


## இரு குழுக்களுக்கிடையில் மோதல்; மரக்கட்டையால் தாக்கி ஒருவர் கொலை

(சம்மாந்துறை)

இரு குழுக்களுக்கு இடையில் இடம் பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் 2, வன்னியார் வீதியில் உள்ள கடற்கரைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது மரக்கட்டை ஒன்றால் தலையில் தாக்கியதில் 73 வயது முஹம்மது தம்பி மீரான் எனும் மீராலெப்பை என்பவர் உயிரிழந்தார்.

மது போதையிலிருந்த இருவரே இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

விஜயதசமியை முன்னிட்டு கந்தர் மடம் ஆத்திசூடி வீதியில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தின் சித்திர வித்தியாரம்பம் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெறும்.

எனவே பயில விரும்பும் மாணவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு சித்திரப் பயிற்சி நிறுவனத்தினர் கேட்டுக் கொண்டனர். (இ-5)

## சொகுசு வாகனத்தில் ஹெரோயின் கடத்தல்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய வெளியேற்ற பகுதியில் சொகுசு வாகனத்தில் ஒரு தொகை ஹெரோயினுடன் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நபர்களிடமிருந்து 50 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் சுமார் 500 மில்லியன் ரூபாய் பெறுமதியானது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விசேட நல்லிணக்க ஒன்றுகூடல்





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மாணவர்களுக்கும், தென்பகுதி மாணவர்களுக்குமிடையிலான விசேட நல்லிணக்க ஒன்றுகூடல் நிகழ்வின் ஒரு அம்சமாக யாழ் மாநகர சபை முதல்வருடனான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இச் சந்திப்பில் யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட், யாழ் மாநகரத்தின் தற்போதைய நிலை, வடக்கு மக்களின் அரசியல் அபிலாசை, எதிர்பார்ப்பு இலங்கை மக்களாக ஒன்றித்து வாழ வேண்டியதன் முக்கியத்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எடுத்துரைத்தார்.

இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இவ்வாறான ஒன்றுகூடல்கள் வருடா வருடம் குறித்த அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் யாழ் மற்றும் நல்லூர் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், தென்பகுதி வலய அதிகாரிகள், இவ் ஒன்றுகூடலின் ஏற்பாட்டாளர்கள், இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-5-7)

# திசைகாட்டி சின்னத்தில் தேசிய மக்கள் சக்தி

## அநுரகுமார அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, திசைகாட்டி தான் பெரும்பாலானவர்களுக்கு சரியான வழியைக் காண்பிப்பதாகவும் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று செய்யப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதே எமது இலக்காகும். அதற்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றேன். நவம்பர் 16 ஆம் திகதிக்கு பின்னரும் நாட்டைச் சீரழிக்கும் ஆட்சி தொடர வேண்டுமா?, அல்லது மாற்றம் வேண்டுமா? என்பது மக்கள் கைகளிலேயே இருக்கிறது.

மாற்றத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தியாக நாம் தயாராக இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலில் " திசைகாட்டி " சின்னத்திலேயே போட்டியிடவுள்ளோம். திசைகாட்டி தான் பெரும்பாலானவர்களுக்கு சரியான வழியைக் காண்பிக்கிறது. மாற்றத்தை நோக்கிய இந்த பயணத்தில் மக்களை எம்முடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் என அநுர மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொடிகாமத்தில் 13 வீடுகள் கையளிப்பு






(சாவகச்சேரி)

கொடிகாமம் தெற்கு ஜே/328 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட 13 வீடுகள் கடந்த சனிக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி. தேவந் தினி பாபு தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து கொண்டு வீடுகளைக் கையளித்தார்.

மேலும் இந் நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (இ-5-30)

# வயிற்றிலிருந்த கட்டியை வெட்டியகற்றி சாதனை



(அக்கரைப்பற்று)

பெண் ஒருவரின் வயிற்றிலிருந்த 19.5 Kg நிறையுள்ள கட்டியொன்றினை வெட்டி அகற்றிய சாதனையை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் சுமார் 2 மணித்தியாலம் இடம்பெற்ற இந்த சத்திர சிகிச்சையை அடுத்து கட்டி அகற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

19.5 Kg நிறையையும் சுமார் 48CM நீளத்தையும் 34CM அகலத்தையும் 23CM உயரத்தையுமுடைய பெரும் கட்டி ஒன்றை வெட்டி அகற்றிய சாதனை எமது வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்களால் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது. (இ)

# கோத்தாவின் குடியுரிமை விவகாரம்

# ராஜிதவின் போலிப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாறக் கூடாது- ஹேரத்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமை விவகாரம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி நீதிமன்றம் செல்வதற்குத் தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்னவால் வெளியிடப்பட்டிருக்கும் கருத்து மக்களை முழுமையாகத் திசை திருப்பும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகும். அத்தகைய பொய்யான பிரசாரங்களால் பொதுமக்கள் ஏமாறக் கூடாது என்று அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி.தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று தேர்தலைத் தவிர்த்து



அல்லது வேறு ஏதேனும் திட்டங்களைப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமை யைப் புறந்தள்ளுவதற்கான எந்த வொரு முயற்சியிலும் நாங்கள் ஈடுபட மாட்டோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமை விவகாரம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி நீதிமன்றம் செல்வதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

அக்கருத்திற்கு மறுப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தால் வெளியிடப்பட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## இறுவெட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதி ஈழத்து சீரடி சாயி மந்திரின் சீரடி சாயி பாபா புகழ் பாடும் பக்தி இறுவெட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் [illegible] ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஆலய மண்டபத்தில் பா.ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி. சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. த. ஜெயசீலன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கி. விசாகரூபன், ஜே/77 கிராம உத்தியோகத்தர் திருமதி. எம். யூட் ஜெயக்குமார், யயன் கலாநிதி நா. தனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண வீதிப்பாதுகாப்பு வாரம் ஆரம்பம்



வடமாகாண வீதிப் பாதுகாப்பு வார ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை யாழிலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வீதிப் பாதுகாப்பு சம்பந்தமான உறுதிமொழி எடுக்கப்பட்டதுடன் பலூன்களும் பறக்கவிடப்பட்டன. இதில் வைத்தியர் த.கோபிசங்கர், பாடசாலை மாணவர்கள், ஆளுநர் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரும் இணைந்திருந்தனர். (இ-10)

# மோகம்...! வேகம்...! சோகம்...!

மோட்டார் சைக்கிள் மோகத்தின் விளைவுகளை பெரும் சோகமாக பெற்றோர்கள் அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பதின்ம வயதினரின் மோட்டார் சைக்கிள் மீதான மோகமும் வீதிகளில் அவர்கள் செல்லும் வேகமும் அதன்பால் ஏற்படும் விபத்துக்களின் இழப்புக்களும் பெரும் சோகத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

போர்க்காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு நிகராக சமகாலத்தில் வீதிவிபத்துக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.


போர் முடிவடைந்ததன் பின்னர் சாதாரண தெருக்கள் கூட காப்பெற் வீதியாக மாற்றப்பட்டதும், விதவிதமான மோட்டார் சைக்கிள்களின் வருகையும் அது தொடர்பான விளம்பரப்படுத்துதல்களும் இளைஞர்களின் அதிவேகங்களும் தான் உயிர்களைக்காவு கொள்ளும் எமனாக மாறியிருக்கிறது.

இலங்கை முழுவதும் குறைந்தது நாள் ஒன்றில் 20 பேர் வீதி விபத்துக்களினால் உயிரிழக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் ஏற்படும் உயிரிழப்புக்கள் தான் அதிகம் என்கின்றன புள்ளிவிபரங்கள்.

### இந்த விபத்துக்களுக்கும் பலி யெடுப்புக்களுக்கும் காரணங்கள் என்ன?

இளைய தலைமுறையினர் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் மற்றவர்களின் உயிரின் மீதான அக்கறையின்மையும் தான் இதுபோன்ற விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதற்கு மிக முக்கியமான காரணங்களாக அமைகின்றன.

தாங்கள் பட்ட கஷ்டங்களையும் தங்களுக்கு கிடைக்காதவைகளை, தாங்கள் அனுபவிக்க முடியாமல் போனவற்றை தமது பிள்ளைகள் பெற்றுவிட வேண்டும் என்று பெற்றோர் நினைப்பதன் விளைவுகளும் இன்றளவும் பிள்ளைகளை இழந்து கொண்டிருக்கி



நேருகின்றது.

முறையான வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமலும், முறையாக வாகனம் ஓட்டத் தெரியாமலும் இருக்கும் 17,18 வயது இளைஞர்கள் இன்று அதிகளவில் மோட்டார் சைக்கிள்களை செலுத்திச் செல்வதனைக் காண முடிகின்றது. அண்மையில் நிகழ்ந்த பெரும்பாலான விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் வயது வரம்பினை எடுத்துப்பார்க்கும் பொழுது 20 வயதுக்குள் குறைந்த இளைஞர்கள் தான் அதிகளவில் உயிரிழந்தும் இருக்கிறார்கள் படுகாயமடைந்தும் இருக்கிறார்கள்.

போருக்குப் பின்னர் வீதிகள் செப்பனிடப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்பட்டதன் பின்னர் அதிவேகம் என்பது மிகச் சாதாரணமானதாக மாறிவிட்டது. இதன் விளைவு தங்கள் உயிர்களையும் மாய்த்து வீதியில் பயணிப்பவர்களின் உயிரையும் கூடவே பறித்துச் செல்கிறார்கள் இளைஞர்களும் பள்ளி மாணவர்களும்.

### வீதியில் விதி தீர்மானிக்கப்படுகிறது!

மோட்டார் சைக்கிள்கள் மட்டுமல்ல அரச பேருந்துகளும் சரி தனியார் பேருந்துகளும் சரி தங்களிடையேயான போட்டிகளிலும் சாகங்களிலும் வாகனங்களைச் செலுத்து மோதி பலரைப் பறிகொடுத்திருக்கிறோம்.

போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களைச் செலுத்த வேண்டாம் என்று பொலிஸார் பலமுறை எச்சரித்தும் அவர்களின் போட்டி போடும் மனப்பாங்கு இன்னமும் குறைந்த பாடில்லை. தனியார் மற்றும் அரச பேருந்துகள் போட்டி போட்டு ஓடியதன் விளைவுகளாக பல உயிர்களை பறிகொடுத்திருக்கிறது வடக்கு மாகாணம். போரின் வலிகளை விடக் கொடூரமானதாக அது மாறியிருக்கிறது.

இதனால் வீதியில் இறங்கினால் எங்கள் விதி மரணம் என்ற அச்சத்தில் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையும் வந்திருக்கிறது.

வீதிப்போக்குவரத்து விதிகளை மதிக்கும் நபர்கள் மிகக் குறைந்தளவில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மைச் சாரதிகள் அவற்றைக் கண்டுகொள்வதில்லை என்கிறார்கள் பொலிஸார்.

வீதிகளில் வாகனங்களுடன் இறங்கினாலே ரொக்கெட் பறப்பது போல பறக்கும் அதிவேக பயணத்தையே மேற்கொள்கிறார்கள். வீதி விளக்குகளை கவனிப்பது இல்லை என்பது ஒரு புறமிருக்க, மற்றையவர்கள் தங்களை திரும்பிப் பார்க்க வேண்டும் என்னும் அதிக ஆசையும், மற்றவர்கள் தங்கள் குறித்துப் பேச வேண்டும் என்ற விருப்பத்தையும் மோகத்தையும் கொண்டிருக்கும் நபர்களும் இளைஞர்களும் இதுபோன்று வாகனங்களை செலுத்திக்கொள்கிறார்கள்.

இதுபோன்று வடக்கிற்கு புகையிரதப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதிகளவான விபத்துக்களையும் உயிர்ச் சேதங்களையும் சந்தித்திருக்கிறோம். சரியான வகையில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படாமலும் அவை சரியான முறையில் இயங்காமல் இருப்பதனாலும் இந்த விபத்துக்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆக, விபத்துக்களை கட்டுப்படுத்த சாரதிகள் தங்கள் கவனத்தைச் செலுத்தும் அதேவேளை உயிர்களைக் காக்கும் பொருட்டு வீதி முறைச்சட்டங்களையும் மதித்தாக வேண்டும்.

பள்ளிக்கூடச் சிறுவர்களின் மோட்டார் சைக்கிள்கள் மீதான மோகம் என்பது விபரீதமானதாக இருக்கிறது. இப்போதெல்லாம் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் மட்டுமே பள்ளிக்கூடம் போவேன், ரியூசன் போவேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

அவர்களின் அடம்பிடித்தலுக்கு இசைந்து போகும் பெற்றோர் வேறு வழியின்றி வாங்கிக்கொடுத்து விடுகின்றனர். அவர்களின் சகபாடிகளும் ஒன்றாகச்சேர்ந்து வாகனங்களை செலுத்தும் விதம் நெஞ்சைப் பதறவைப்பதாக இருப்பதை பல இடங்களில் நேரில் கண்டிருக்கிறோம்.

இளம்பிள்ளைகள் கூட தற்போது குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பார்ட்டி வைத்தல் என்னும் புதுவகை கலாசாரம் நம்மிடையே தற்போது தோன்றியிருக்கிறது. பார்ட்டி என்னும் போர்வையில் குடித்து விட்டு பின்னர் வாகனங்களைச் செலுத்தி தங்கள் உயிர்களையும் மற்றவர்களின் உயிரைப்பறித்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பிள்ளைகள் மீதான அக்கறையை பெற்றோர்கள் கொண்டிருந்தாலும் வாகனங்களை வாங்கிக்கொடுக்கும் முன்னர் பல முறை யோசித்துச் செயற்பட வேண்டும்.

அதேபோன்று முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனங்களை கொள்வனவு செய்யும் நிலைப்பாட்டையும் பெற்றோர்கள் எடுக்காமல் இருப்பது சிறந்தது.

வீதியில் மற்றவர்களின் விதியை முடிக்கும் பணியை நாம் செய்யாமல் இருக்க வேண்டு மாயின் வீதி விதிமுறைகளை பின்பற்றுவோம். உயிர்களைக்காப்போம். உறுப்புக்களை பாதுகாப்போம்.

38 ஆவது மருத்துவ அணி

# பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்ட துப்பாக்கிகள்,வெடி பொருட்கள் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை, அலஸ் தோட்டம் மயானத்தில் பாதுகாப்பான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களுடன் வெடிபொருட்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று மீட்கப்பட்டது.

இறுதிக் கிரியைகளுக்காக் தோண்டப்பட்ட கிடங்கிலிருந்தே குறித்த கொள்கலன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

அதன் பின்னர் உப்புவெளி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தக்வலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த ஆயுதங்களை எடுத்துச் சென்றனர்.

பாதுகாப்பான முறையில் கிறீஸ் இட்டு பதப்படுத்தி பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டவாறு அவை புதைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தக் கொள்கலனில், **M-70 ab 2** ரக துப்பாக்கிகள் 5, **Ssmg** ரக துப்பாக்கி 1, **T-56** ரவைகள் 1700, **9mm** ரவைகள் 33, **T-56** மகசின்கள் 15 ஆகியவை நீல நிற கொள்கலனில் பதப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த மயானத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்ததுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் இந்திய இராணுவ காலத்தில் பயிற்சி முகாம் இயங்கியுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் யாவும் சுத்தப்படுத்தி பாவிக்கும் நிலையில் காணப்படுவதாக உப்புவெளி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளை பார்வையிட்ட அமெரிக்க அதிகாரிகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட முகமாலைப் பகுதியில் அமெரிக்க நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க நாட்டின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் நேற்று சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை மற்றும் அரசர்கேணி ஆகிய பகுதிகளில் சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியுடன் டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினால் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினால் முகமாலை பகுதியில் அமெரிக்க நாட்டின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க நாட்டின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அந்த வகையில் குறித்த பகுதிக்குச் சென்ற குழுவினர் குறித்த பகுதிகளின் நிலைமைகள் தொடர்பிலும் வெடிபொருட்களை அகற்றும் பணிகளின் போது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன், கண்ணிவெடி அகற்றும் பணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த பகுதிகளில் தனியாருக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு காணிகள், அரச காணிகள் என்பன உள்ளடங்கலாக வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்-2019

மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

ர.அபிநயன்-193, தோ.கோபிதன்-183, ஸ்.நிதுசன்-182, சி.மிதுலன்-182, வ.அபிசா-180, இ.நிரோஜன்-172, ஜெ.அபிசன்-172, சு.சயன்-170, நே.கவின்சா-170, ஜெ.கம்சிகா-169, கு.தனுசிகன்-167, த.ரிசிகேசன்-166, தி.பிரதீசா-166, யோ.நிவேதினி-166, ச.ஷாணக்கியன்-165, ச.சரணியா-165, வி.அபினேஸ்-165, கி.நிஷான்-164, ம.மதுமிலன்-164, த.மயூரிகா-164, வி.திவிப்பிரியா-162, செ.கயல்நிலா-162, ம.சாருஜன்-162, தி.சிலோஜன்-161, த.கிசானி-161, சு.மிதுலன்-160, நே.பதுர்சிகா-160, த.பவித்திரா-160, கு.பிரித்திகா-159, கோ.அஜய்-159, செ.பவிதா-159, வி.நிருபன்-158, கோ.யக்ஸினி-157, ம.யதுர்சன்-157, க.தனுசியா-156, ஜெ.தரணிகா-155, யோ.லோஜிதன்-155, க.சாரங்கா-155, தி.தருநிகன்-152. (9-281)

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

வவுனியா விபுலானந்தா கல்லூரி

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவர்கள் இருவர் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் பொ. சிவநாதன் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் குறித்த பாடசாலையில் இருந்து 144 பேர் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 55 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் விஜயசங்கர் நிருத்தனன், கஜேந்திரன் ஜஸ்விந் ஆகிய இருவரும் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளனர். (9-250)

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த தரணியா விவேகானந்தராசா 192 புள்ளிகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் முதலாம் நிலையைப் பெற்றுள்ளதுடன் குறித்த பாடசாலையில் 32 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய 56 மாணவர்களில் 32 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதுடன் ஏனைய மாணவர்கள் அனைவரும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (9-250)






வவுனியாத் தமிழ்ச்சங்கம் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்திவரும் சிந்தனை அரங்க நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த கருத்தரங்கு இம்முறை "ஆயுர்வேதம்" எனும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூன்று துறைசார்ந்த வல்லுநர்களின் உரைகள் இடம்பெற்றன. (படங்கள்:-நெளுக்குளம் செய்தியாளர்)



வவுனியா வடக்கு வலய பாடசாலைகளில் ஒன்றான வவுனியா விவேகானந்த வித்தியாலயத்தில் 62 வருடகால பாடசாலை வரலாற்றில் நான்கு மாணவர்கள் முதன் முறையாக சாதனை படைத்துள்ளார்கள். இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு 16 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள். இவர்களில் சிவகுமார் தீபிகா-179 புள்ளிகளையும், ஸ்ரீலக்ஸ நந்தராசா சாம்பவி-168 புள்ளிகளையும், தர்மகுலசிங்கம் டிலக்சிகா-165 புள்ளிகளை யும், விமலதாஸ் திவ்வியா-159 புள்ளி களையும் பெற்று சித்தியடைந்துள்ளதுடன் ஏனைய மாணவ ர்கள் 100 புள்ளிகளு க்கு மேல் பெற்றுள்ளனர். (9-299)

# மருந்தாளரின் இடமாற்றத்தை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட உயிலங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றிய மருந்தாளர் திடீர் என இடமாற்றம் செய்யப்பட்டமையினை கண்டித்து அப்பிரதேச மக்கள் நேற்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிலங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்துக்கு அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள், வைத்திய தேவைகளுக்காக சென்று வருகின்றனர்.

குறித்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு இன்று வரை நிரந்தர வைத்தியர் இல்லை.

இந்த நிலையில் குறித்த சுகாதார பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றி வந்த மருந்தாளர் திடீரென இடமாற்றம் பெற்றுள்ளார்.

பதில் கடமைக்கு மருந்தாளர் நியமிக்கப்படாத நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டமையினை கண்டித்து அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக உயிலங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு நிரந்தரமான வைத்தியர் ஒருவரையும், மருந்தாளர் ஒருவரையும் நியமிக்கக்கோரி குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (9-285)



அக்கராயன் மேற்கு பொது நோக்கு மண்டபம் கடந்த சனிக்கிழமை மக்களின் பாவனைக்காக திறந்து வைக் கப்பட்டுள்ளது. அக்கராயன் கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசி ரியர் சுந்தரமூர்த்தி தயா பரன் குறித்த பொது மண் டபத்தினைத் திறந்து வைத் தார். இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக திட்ட அபி விருத்தி உத்தியோகத்தர் சி.சுரேஸ்குமார் கலந்து கொண்டார். (படம்:-அக்கராயன் செய்தியாளர்)

# நெத்தலியாறு கரையோரப்பகுதிகளில் தொடரும் சட்டவிரோத செயற்பாடுகள்

## தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையாகக் காணப்படுகின்ற நெத்தலியாற்றுக் கரையோரப்பகுதிகளில் தொடர்ந்து சட்டவிரோதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இதனால் அயலில் உள்ள தமது கிராமங்கள் பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் எல்லையோரத்தில் காணப்படுகின்றதும் முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு பிரதேச எல்லையோரத்தையும் பிரிக்கின்ற நெத்தலியாற்றுப்பகுதியில் தொடர்ந்தும் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அதாவது கசிப்பு உற்பத்தி, சட்டவிரோ தச்செயற்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இதனால் தங்களுடைய கிராமங்களில் புதியவர்களின் நடமாட்டம் மற்றும் திருட்டுச்சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் இவற்றைக்கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா நொச்சிமோட்டை பாலத்தில்
# அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை பாலத்தினூடான போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளது. நீண்டகாலமாக இப்பாலத்தினை புனரமைத்துத்தருமாறு கோரிய போதிலும் இன்று வரையில் அப்பாலமூடான போக்குவரத்து மேற்கொள்வதில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அப்பாலத்தில் விபத்துகள் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாலம் கடந்த சில தினங்களாக உடைந்த நிலையில் காணப்படுவதுடன் ஒரு பக்கம் ஊடாகவே வாகனங்கள் தமது பயணத்தினை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாலத்தில் போடப்பட்டுள்ள தகரம் சில உடைந்த நிலையில் காணப்படுகின்றது. பாரஊர்திகள் பயணம் மேற்கொள்ளும் இப்பாலத்தில் போக்குவரத்து பொலிஸாரும் கடமையில் இல்லை. எனவே சாரதிகள் இப்பாலத்தில் அபாயகரமான போக்குவரத்தினையே மேற்கொண்டு வருகின்றதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக வினவுவதற்காக வவுனியா மாவட்டத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போதும் தொடர்புக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (9-250-299)




## செஞ்சோலை காணி விடயத்தில்
# தமிழ்த் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கிளிநொச்சி)

தமிழ் அரசியல் தலைமைகள் காணி விடயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்காவிடின் சிங்கள தலைமைகளிடம் செல்ல வேண்டி ஏற்படும் எனச் செஞ்சோலைக் காணியில் குடியேறியுள்ள குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை காணியில் குடியேறியுள்ள செஞ்சோலை குடும்பங்கள் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடகச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த காணி செஞ்சோலை சிறுவர்களின் தேவைக்காக அவர்களுக்கென வழங்கப்பட்ட பணத்திலிருந்து பெறப்பட்ட காணியாகும். குறித்த காணி இங்குள்ளவர்களிற்கே கிடைக்க வேண்டும். தற்போது இந்தக்காணிக்கு வேறு சிலர் வந்து உரிமை கோருகின்றனர்.

இங்குள்ளவர்களில் 15 பேருக்கு காணி வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஏனையவர்களிற்கு காணி வேறு இடங்களில் இருப்பதால் இங்கு வழங்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் இங்கு வளர்ந்தவர்கள் பெற்றோர், உறவினர் அற்றவர்கள். இவர்களுக்கென காணி வேறு எங்கும் இல்லை. இவர்கள் திருமணமாகி கணவரில் தங்கியுள்ளனர். அவர்கள் சமூக ரீதியான பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் அவர்கள் குடும்பம் சார்ந்து ஏதேனும் சவால்களுக்குட்பட்டால் அவர்கள் தங்கிக் கொள்வதற்கு உறவினர்களோ வீடுகளோ இல்லை.

இந்த நிலையை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும். இந்த நிலையில் எமது அரசியல் தலைமைகள் குறித்த காணி விடயத்தில் முறையாக செயற்படாவிடின் நாங்கள் சிங்கள தலைமைகளிடம் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என மேலும் தெரிவித்தனர். (9)

# சிறுவர் தின நிகழ்வுகள்





(குருமன்காடு)

வவுனியா சிறுவர் அபிவிருத்தி கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நகரசபை உறுப்பினர் க.செந்தில்ரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டிருந்ததுடன் சிறப்பு விருந்தினராக நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன், ந.சோனாதிராஜா, நா.லக்சனா, ரி.கே.இராஜலிங்கம், த.பரதலிங்கம் மற்றும் மதத்தலைவர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)





(அக்கராயன்)

சிறுவர் தினத்தை முன்னிட்டும் போரின் போது உயிரிழந்த மாணவர்களின் நினைவாகவும் வருடந்தோறும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களினால் நடத்தப்படுகின்ற இரத்ததான முகாம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இரத்ததான முகாம் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, ஓய்வுப்பெற்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இளைஞர்கள், யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். இரத்ததானம் வழங்கியவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (9-350)





(பனிக்கன்குளம்)

பாதுகாப்பு படைகளின் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதியின் வேண்டுகோளுக்கிணங்க 68 ஆவது படைப்பிரிவின் தளபதியின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306 இன் அனுசரணையுடன் வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம் மற்றும் மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 253 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம்-இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பாடசாலை உபகரண பொருட்களை அன்பளிப்புச் செய்த லயன்ஸ் கழக பிரதிநிதிகள், இராணுவத் தளபதிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-281)

# வடக்கு ஆளுநரால் வவுனியாவில் இரு கட்டடங்கள் திறந்துவைப்பு





(நெளுக்குளம்)

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் வவுனியாவில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளன கட்டடம் ஆகியன நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் முப்பத்து மூன்று இலட்சம் ரூபா செலவில் விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து வவுனியா புகையிரத நிலையம் முன்பாக உள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் புனரமைக்கப்பட்ட வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனக் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் 8 கமநல கேந்திர நிலையங்களும் அதன் கீழ் 256 கமக்கார அமைப்புக்கள் உள்ளன. அதனை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனம் குறித்த பகுதியில் இயங்கவுள்ளதுடன் மாவட்ட மட்ட விவசாயிகளின் பொருளாதார மற்றும் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில்செயற்படவுள்ளது.(9-250-299)

## கிளிநொச்சி மேற்கு கிராமப்பகுதிகளில் 10 வருடங்களாக பேருந்து சேவைகள் சீரில்லை

(அக்கராயன்)

கிளிநொச்சி மேற்கு கிராமங்களான கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் சேவையை ஏற்படுத்தித்தருமாறு கடந்த பத்தாண்டுகளாக இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

வலைப்பாட்டில் இருந்து அதிகாலை தொடக்கம் முற்பகல் 9 மணி வரை தனியார் பேருந்துகள் கிளிநொச்சியினை நோக்கி பயணிக்கின்றன. குறித்த பேருந்துகள் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னரே வலைப்பாட்டினை நோக்கி திரும்புகின்றன. காலை 9 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும் இடையில் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய கிராமங்களுக்கான பேருந்து சேவைகள் இடம் பெறாததன் காரணமாக பல்லவராயன்கட்டுச் சந்தியில் நீண்ட நேரம் பயணிகள் காத்திருக்க வேண்டியுள்ளது.

அவசரமானவர்கள் ஆட்டோவுக்குப் பெருமளவு பணம் வழங்கி கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய கிராமங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் முற்பகலில் மேற்படி கிராமங்களுக்கு பேருந்து சேவை கள் நடத்தப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கடந்த பத்தாண்டுகளாக நேரிலும் மனுக்கள் மூலமும் கோரிக்கை விடுத்தும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ளன.

இதன் காரணமாக மேற்படி கிராமங்களில் வாழ்கின்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன. மேற்படி கிராமங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் சேவையை ஏற்படுத்த வேண்டும். முழங்காவில் நகரத்தில் இருந்து மேற்படி கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் கூடுதலாக இடம்பெற வேண்டும். காரணம் முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கு இப்பகுதியில் இருந்து மக்கள் சென்று வருவதற்கு போக்குவரத்து வசதி பெரும் நெருக்கடியாக உள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (9-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் பதுங்கல்

### மாநில உயர் அதிகாரி தகவல்



(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 200 முதல் 300 பயங்கரவாதிகள் வரை பதுங்கி இருப்பதாகவும் பாகிஸ்தானும் எல்லை தாண்டி பயங்கரவாதிகளை இந்தியாவுக்குள் அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அம்மாநில பொலிஸ் உயர் அதிகாரி தில்பாக் சிங் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

'பயங்கரவாதிகளை இந்தியாவுக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்ற நோக்கில், எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் தொடர்ந்து அத்துமீறித் தாக்குதல் நடத்தி வருகின்றது.

பாதுகாப்புப் படையினரின் தீவிர நடவடிக்கையால், தற்போது ஜம்மு மற்றும் கார்கில் ஆகிய பகுதிகளில் நிலைமை சீரடைந்து வருகின்றது' என்று தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டதிலிருந்து அம்மாநிலத்தில் பாரிய தாக்குதல்களை நடத்த பாகிஸ்தான் பயங்கரவாதிகள் முயன்று வருவதாக இந்தியப் பாதுகாப்புத் தரப்பு தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படகு கவிழ்ந்து

(ரோம்)

இத்தாலிக்கு அண்மையில் உள்ள சிசிலிக்கு தெற்கே, லம்பேடுசா தீவின் கரையிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 50 பேரை ஏற்றிச் செல்லும் படகு ஆபத்தில் இருப்பதாக எச்சரிக்கை கிடைத்தது என்றும் இதனையடுத்து மீட்பு கப்பல்களின் உதவியுடன் 22 பேரை மீட்டதாகவும் கடலோரக் காவற்படை தெரிவித்தது.

அத்தோடு குறித்த பகுதியில் கடலோர காவற்படை மற்றும் பொலிஸாரின் படகுகள் தேடுதல் நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவுடன் சோனியா காந்தி, மன்மோகன் சிங் சந்திப்பு



(டில்லி)

அரசமுறைப் பயணமாக இந்தியா சென்றுள்ள பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் சந்தித்தனர்.

ஷேக் ஹசினா நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

இருநாட்டுத் தலைவர்களுக்கு இடையிலான உயர் மட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் 7 புதிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், பிரியங்கா காந்தி, காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் ஆனந்த் சர்மா உள்ளிட்டோர் நேற்றுச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குர்து இன கிளர்ச் தங்களுக்கு தொட

(வோஷிங்டன்)

துருக்கியால் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடப்படும் குர்து இனக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக, துருக்கி இராணுவ நடத்தவுள்ள தாக்குதலுக்கு தாம் பொறுப்பேற்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்தது.

இதுகுறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், 'துருக்கி தங்களின் நீண்ட நாள் திட்டப்படி சிரியாவின் வடக்குப் பகுதியில் தாக்குதல் நடத்தவுள்ளது. அமெரிக்கப் படைகள் இந்தத் தாக்குதலில் ஈடுபடவோ அல்லது இதற்கு ஆதரவு தெரிவிக்கவோ இல்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். ஆக்கிரமிப்பு பிராந்தியத்தின் முக்கிய பகு

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரெக்ஸிற் ஒப்பந்த தீர்மானம் இவ்வார இறுதியில் வெளியிடப்படும்

### பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

(பாரிஸ்)

பிரெக்ஸிற் ஒப்பந்தத்தின் சாத்தியப்பாடுகள் தொடர்பாக இந்த வாரயிறுதியில் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானத்தை வெளியிடும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மக்ரோன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனிடம் தெரிவித்தார்.

அந்த ஒப்பந்தம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கைகளை மதிக்கின்றனவா என்பது பற்றிய பேச்சுவார்த்தைகள் விரைவிலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் மக்ரோன் சுட்டிக்காட்டினார்.

ஆனால், ஒக்டோபர் 31 க்கு அப்பால் பிரித்தானியாவின் வெளியேற்றத்தில் தாமதம் ஏற்படும் என்று நினைத்து ஐரோப்பிய ஒன்றியம் செயற்படக் கூடாது என்று பிரதமர் பொரிஸ் ஜோன்சன் வலியுறுத்தினார்.

இருப்பினும், ஒக்டோபர் 19 ஆம் திகதிக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் மீண்டும் கோரிக்கையொன்றை முன்வைக்குமாறும் பிரித்தானிய சட்டவியலாளர்கள் கோரினர்.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடன் இந்த வார இறுதியில் இடம்பெறும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தை அடைய முடியும் என்று பிரதமர் ஜோன்சன், ஜனாதிபதி மக்ரோனிடம் நம்பிக்கை வெளியிட்டார்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியாவுடன் செய்து கொண்ட சமரசங்களுடன் பொருந்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், ஐரோப்பிய ஒன்றியக் கொள்கைகளை மதிக்கும் பிரெக்ஸிற் ஒப்பந்தம் சாத்தியமா? என்பது குறித்து மதிப்பீடு செய்வதற்காக மைக்கேல் பார்னியர் குழுவுடன் எதிர்வரும் நாட்களில் விரைவாகப் பேச்சுவார்த்தைகளை தொடர வேண்டும் என்று ஜனாதிபதி மக்ரோன், பிரதமரிடம் கூறியதாக பிரான்ஸ் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## குட்டியைக் காப்பாற் யானைகள் அருவியி



(பாங்கொக்)

தாய்லாந்தில் மூன்று வயதான யானைக் குட்டியொன்றை காப்பாற்றுவதற்கு முற்பட்ட வேறு யானைகள் அருவியொன்றில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றது.

குட்டியைக் காப்பாற்ற முயன்று ஒன்றன் பின் ஒன்றாக 5 யானைகள் பாறைகளில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் அந் நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

தாய்லாந்தில் காவோ யாய் தேசிய பூங்காவின் பெரும் வனாந்தரப் பகுதிகளில் யானைகள் உட்பட பல்வேறு வன விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. தேசிய பூங்காவிற்குள் ஹயூ நரோக் என்ற அருவியில் இந்த அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி காலை அருவியின் அருகே யானைக் கூட்டம் ஒன்று உலாவிக்கொண்டிருந்தது. அப்போது 3 வயதான குட்டியானை ஒன்று அருவியில் தவறி வீழ்ந்து விட்டது

இதையடுத்து, குட்டியானையை காப்பாற்றும் முயற்சியில் அடுத்தடுத்து 5 யானை

## மேகதாதுவில் அணை கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது

### வைகோ வலியுறுத்து

(சென்னை)

தமிழகத்தின் உயிர் ஆதாரமான காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒருபோதும் அனுமதி வழங்கக் கூடாது என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தினார்.

மேகதாது அணைகட்டும் விவகாரம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள வைகோ குறித்த அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர், "காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் தடுப்பணை கட்டி முடிக்க வேண்டும் என்பதில் கர்நாடக மாநிலம் முனைப்பாக இருக்கின்றது.

கர்நாடக அரசின் சார்பில் அதன் நிர்வாக நிறுவனம் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், காவிரியின் குறுக்கே அணை கட்டுவதற்கு தமிழகத்தின் கருத்தையோ, அனுமதியையோ பெற வேண்டிய தேவை இல்லை' என்று கூறப்பட்டுள்ளது.

காவிரி நீர் பங்கீடு தொடர்பான 1892 ஆம் ஆண்டில் மைசூர் மாகாணத்திற்கும் - சென்னை மாகாணத்திற்கும் இடையே உருவான ஒப்பந்தம், 1924 இல் போடப்பட்ட ஒப்பந்தம் ஆகிய இரண்டுமே, காவிரியின் குறுக்கே அணை கட்டுவது குறித்து திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்து இருக்கின்றன.

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவுகளிலும் கர்நாடகம் தன்னிச்சையாக அணைகள் கட்டிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. எனவே தமிழகத்தின் உயிர் ஆதாரமான காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒருபோதும் அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்துகிறேன்" என மேலும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## விபத்து; இருவர் உயிரிழப்பு

### 22 பேர் பாதுகாப்பாக மீட்பு



## ர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்; டர்பில்லை என்கிறது அமெரிக்கா

தியை வீழ்த்தியபின் தங்கள் படைகள் அந்த பகுதியில் இருக்காது' எனக் கூறுகிறது அமெரிக்கா.

மே ம், இரண்டு வருடங்களாக கைது செய்யப்பட்ட இஸ்லாமிய அரச குழுவின் கைதிகளைத் துருக்கி பொறுப்பேற்றுக் கொண்டது. மேலும், வடமேற்கு சிரியா பகுதியில் உள்ள அனைத்து இஸ்லாமிய அரச குழுக்களின் கைதிகளை பாதுகாக்கும் பொறுப்பை துருக்கி ஏற்றுக் கொண்டது.

பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர்கள் நாட்டிலிருந்து வந்த ஐ.எஸ். தீவிரவாதிகளை திரும்பப்பெறுமாறு நாங்கள் கேட்டபோது



அந் நாடுகள் அதை மறுத்துவிட்டன. எங்களுக்கு அதிகம் செலவாகும் என்பதால் நாங்கள் அவர்களை நீண்டகாலம் வைத்திருக்கமாட்டோம்' என அமெரிக்கா குறிப்பிட்டது. (ஐ)

## ற்ற முயன்ற வேளை ல் வீழ்ந்து உயிரிழப்பு



கள் அருவியில் இருந்து விழுந்தன. கூட்டத்தில் இருந்த 2 யானைகள் மாத்திரம் திகைத்து போய் நின்று கொண்டிருந்தன.

இதனிடையே, யானைகள் பிளிறும் சத்தம் கேட்டு தேசிய பூங்கா ஊழியர்கள் அருவியின் கீழே சென்று பார்த்தனர். அப்போது குட்டியானை உட்பட மொத்தம் 6 யானைகள் பாறைகளில் மோதி உயிரிழந்ததைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து, அருவிக்கு அருகே தத்தளித்துகொண்டிருந்த 2 யானைகளை ஊழியர்கள் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். குறித்த இரண்டு யானைகளும் உளரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு முன் கடந்த 1992 ஆம் ஆண்டு அதே அருவியில் இருந்து வீழ்ந்து 8 யானைகள் உயிரிழந்த சம்பவம் தாய்லாந்தில் தேசிய அளவில் கவனத்தை ஈர்த்தமை நினைவுகூரத்தக்கது. (ஐ)


## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு 4 பேர் மரணம்;5 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கான்சாஸ்ஸில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாக கான்சாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர் இதுவரை கைதுசெய்யப்படாத நிலையில் சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## முகமூடிக்கு எதிரான தடையை நீக்குவதற்கு நீதிமன்றம் மறுப்பு

### ஹொங்கொங்கில் வலுக்கும் போராட்டம்



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் முகமூடிகளுக்கு எதிராக அரசு விதித்த தடை சட்டத்தை நீக்க நீதிமன்றம் மறுத்து விட்டதால் தீவிரமடைந்து வரும் மக்கள் போராட்டம் நேற்று பல பகுதிகளில் வன்முறையாக மாறியது.

ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இந்த சட்ட திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் மசோதா கைவிடப்பட்டது. ஆனாலும் ஹொங்கொங்கின் தன்னாட்சியில் சீனா தலையிடுவதை நிறுத்த வேண்டும் எனக் கூறி நான்கு மாதங்களக போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் 70 ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் கடந்த 1-10-2019 அன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

அதேவேளையில், சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங்கொங்கில் மீண்டும் மிகப்பெரிய போராட்டம் வெடித்தது. பல்லாயிரக்கணக்கானோர் முகமூடி



அணிந்து கொண்டு வீதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும்இடையே மோதல் ஏற்பட்டு, தடியடி, கண்ணீர் புகைக் குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது.

ஹொங்கொங்கின் தன்னாட்சியில் சீனா தலையிடுவதை நிறுத்துதல், சுதந்திரமாகத் தேர்தல், போராட்டக்காரர்களை தாக்கிய பொலிஸார் மீது விசாரணை மேற்கொள்ளுதல், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள போராட்டக்காரர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் உச்சக்கட்டத்தை எட்டியது.

பொலிஸார் தங்கள் அடையாளங்களை கண்டுபிடித்துவிடக் கூடாது என்பதற்காக போராட்டக்காரர்கள் முகமூடிகளை அணிந்துகொண்டு போராடி வருகின்றனர். இப்படி முகமூடிகளை அணிந்து போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த புதிய நடவடிக்கையை ஹொங்கொங் அரசு அறிவித்தது.

முகமூடிகளை அணிவது சட்ட விரோதம் என்ற அவசரச் சட்டம் தொடர்பான அறிவிப்பால் போராட்டக்காரர்களின் வேகம் பல மடங்கு அதிகரித்துள்ளது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து ஹொங்கொங் நீதிமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டதால் ஹொங்கொங் முழுவதும் பல வன்முறை சம்பங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனால் ரயில்கள், பேருந்துகள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியது. அரசு அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் தனியார் விற்பனைக் கூடங்கள் அடித்து, நொறுக்கி சூறையாடப்பட்டன. பல பகுதிகளில் வாகனங்கள், கடைகள் எரிக்கப்பட்டதால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க தேவாலயங்கள் மீண்டும் இலக்கு வைக்கப்படலாம் என எச்சரிக்கை

## ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார் கர்தினால்

## தாக்குதல்கள் குறித்து உளவுத்துறையிடமிருந்து எந்தத்தகவல்களும் கிடைக்கவில்லை- ருவான்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் மீது மற்றுமொரு தாக்குதல் நடத்தப்படலாம் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரித்தார் என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டது.

இது குறித்து சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்ததாவது.

ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது மீண்டும் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்புத் தரப்பினர் நாடு முழுவதிலுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

இது குறித்த முதலாவது எச்சரிக்கையை கர்தினால் மல்கம் ரஞ்சித்தே விடுத்தார்.

இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்துமாறு பொலிஸாரையும் படையினரையும் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை தாக்குதல்கள் குறித்த புதிய தகவல்களை அரச புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.இதனைத் தொடர்ந்து கடற்படையினரும் விமானப்படையினரும் இது குறித்து எச்சரிக்கப்பட்டனர்.

இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த பாதுகாப்பு வட்டாரங்கள் பலவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளில் படையினர் பொலிஸாருக்கு உதவுவார்கள் எனத் தெரிவித்தன.

கத்தோலிக்க தேவாலயங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது எனவும் அவை குறிப்பிட்ட இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து பொலிஸ் துறையினர் ஹோட்டல்களுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு தங்கியிருப்பவர்கள் குறித்த விபரங்களை பெறத்தொடங்கினர். மேலும் சந்தேகத்திற்கு இடமான நபர்கள் எவராவது தென்பட்டால் அறிவிக்குமாறும் கோரினர்.

வன்முறைகளை திட்டமிடுபவர்கள் யார் என்பது தங்களுக்குத் தெரியும் எனக் குறிப்பிட்ட பொலிஸார் நிலைமையை உன்னிப்பாக அவதானிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை உறுதிப்படுத்தப்படாத தகவல்களை அடிப்படையாக வைத்து ஹோட்டல்களுக்கு எச்சரிக்கை கடிதத்தை அனுப்பிய பொலிஸ் அதிகாரிகள் குறித்து விசேட விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தத் தாக்குதல்கள் குறித்து உளவுத்துறையிடமிருந்து எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அத்தோடு தாக்குதலகள் நடத்தப்படும் என வெளியான கடிதங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செயலிகள்-ஊடான நடவடிக்கைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும்

(கொழும்பு)

தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்திய வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக வலைத்தளங்கள் மற்றும் தகவல் பரிமாற்று செயலிகள் ஊடான நடவடிக்கைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

வாக்காளர்களைக் கட்டுப்படுத்தும் வகையிலும் போலியான தகவல்கள் பரவாமல் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

இதற்காக பேஸ்புக் மற்றும் அதனோடு தொடர்புடைய வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் ஆகிய செயலிகளின் நிறுவனங்களுடன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

போலியான மற்றும் ஆபத்தான வெறுப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய தகவல்கள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதற்காக பேஸ்புக் நிறுவனம் விசேட குழு ஒன்றையும் நியமித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சு.க.உறுப்பினர்கள் பலர் சஜித்துடன் இணைவர்!

## நவீன் நம்பிக்கை

(மாத்தளை)

எதிர்வரும் சில தினங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க முன்வரவுள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என தெரியவருகின்றது. அந்தக் கட்சியுடன் ஐக்கிய தேசிய கட்சி நடத்திய பேச்சுவார்த்தை நல்ல நிலையில் இருக்கின்றது. எதிர்வரும் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ வுக்கு ஆதரவளிக்க முன்வருவார்கள்.



அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பௌத்த வாக்குகள் சிதறியுள்ளதாக சிலர் தெரிவிக்கின்றனர். சஜித் பிரேமதாஸ வேட்பாளராக நியமிக்கப்பட்டதன் மூலம் எமது பௌத்த வாக்குகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் அதிகரிப்பதற்காக முயற்சித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நினைப்பதும் நடப்பதும்

ஒருவன் இருந்தான். நிறையப் பேர் அவனைத் தேடி தினமும் வந்து கொண்டிருந்தார்கள்.!அந்த அளவுக்கு அவன் ஒரு பெரிய மனிதன் என்று நினைக்கிறீர்களா?அப்படி இல்லை! எல் லோரிடமும் கடன் வாங்கிவிட்டான் சேர்! கடன் கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? தேடி வர ஆரம்பித்துவிட்டார்கள்! பணம் தேவைப்படும் போதெல்லாம் அவன் கடன் வாங்கினான்.

கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற வகையிலே அந்தப் பணத்தை வைத்து ஏதாவது தொழில் செய்ய வேண்டும் அல்லவா? செய்யவில்லை! சும்மா இருந்துவிட்டான். வாங்கிய பணத்தை செலவு செய்துவிட்டான். அது தீர்ந்து போனதும் மறுபடியும் கடன் வாங்கினான்.செலவு செய்தான். கடன் அதிகமாகிவிட்டது.

கடன் கொடுத்தவர்கள் எல்லாம் அடிக்கடி வந்து அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.கடனையோ இவனால் திருப்பிக் கொடுக்க முடியாது.ஆனால் கடன் கொடுத்தவர்கள் தொல்லையோ நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கிறது எப்படி?என்று யோசனை செய்தான்! ஒரு வழியைக் கண்டுபிடித்தான்.பைத்தியம் பிடித்தது மாதிரி பாசாங்கு செய்ய ஆரம்பித்துவிட்டான்.எல்லோரும் அதை நிஜம் என்றே நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். ஏதாவது செய்தாக வேண்டும் என்று சொந்தக்காரர்கள் எல்லாம் முடிவு செய்து விட்டார்கள். வைத்தியர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து காட்டினார்கள்.வைத்தியர்கள் ஒவ்வொருத்தர்களாக வந்தார்கள், அவனைப் பார்த்தார்கள், மருந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். மருந்து கொடுக்கக் கொடுக்க அவன் மிகவும் வேசம் போட ஆரம்பித்து விட்டான்.

பைத்தியம் முத்திவிட்டது மாதிரி தெரிந்தது பார்க்கிறவர்களுக்கு! அந்த வைத்தியர் சரியில்லை...இந்த வைத்தியர் சரியில்லை என்று நினைத்து புதுசு புதுசா வைத்தியர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வர ஆரம்பித்தார்கள். உறவினர்கள்.எதிலும் அவன் சரியாவது மாதிரித் தெரியவில்லை. நடிப்பதில் அவன் ரொம்பப் பலசாலியாக இருந்தான். அவ்வளவு கடன் வாங்கத் தெரிஞ்சவனுக்கு இது கூடவா தெரியாது? பிரமாதமாக நடித்தான்.

கடைசியாக ஒரு வைத்தியர் வந்தார். நிறைய அனுபவம் உள்ளவர். அறிவாளியும் கூட. இவனைப் பரிசோதனை செய்தார். கையைப் பிடித்துப் பார்த்தார், நாக்கை நீட்டச் சொன்னார். அவன் முகத்தை கவனித்துப் பார்த்தார். இவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் இல்லை இவன் நடிக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டார்.

உடனே அவனை... இப்படி என் கூட கொஞ்சம் வா என்று சொல்லி தனியாக ஒரு ரூமுக்குள்ளே அழைத்துக் கொண்டு போனார். பின்பு சொன்னார்.இதோ பாருப்பா நீ இப்படிச் செய்வது சரியில்லை! நீ இதே மாதிரி பாசாங்கு செய்து கொண்டே இருந்தாய் என்று வைத்துக் கொள்! உனக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்து விடும். இப்பவே அதற்கான ஆரம்ப அறிகுறிகள் உன்னிடம் தெரிகிறது! அதனாலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது! என்றார். இதைக் கேட்டதும் அந்த ஆள் உண்மை யிலே பயந்து போய்விட்டார். நிதானமாக யோசித்துப் பார்த்தான் வைத்தியர் சொன்னது நியாயமாக தெரிந்தது.

தன் மனசு லேசா மாறியிருக்கிறது மாதிரி தெரிந்தது. ஆஹா ஏமாந்து போயிட்டோம் என்பதை புரிந்து கொண்டான்!

அந்த நிமிடமே அவன் பாசாங்கு செய்வதை நிறுத்தி விட்டான். பகவான் இராமகிருஷ்ணர் சொன்ன கதை இது.இந்தக் கதையை சொல்லிவிட்டு அவர் என்ன சொல்கிறார் என்றால்,

இடைவிடாமல் நீ எப்படி இருக்கிறதாகக் காட்டிக் கொள்கிறாயோ அப்படியே ஆகிவிடுவாய்! அதனாலே நல்லவனாக இருப்பதாக நீ நினைத்துக் கொண்டால் கூட நீ நல்லவனாக முடியும்! என்றார்.

அதனாலே நாமெல்லாம் வாழ்க்கையிலே நடிக்க வேணும் என்றால் கூட நல்லவனாக நடிப்பதற்கு முயற்சி செய்வது நல்லது! நம்ம ஆள் ஒருத்தன் இந்தக் கதையிலே வருவது மாதிரியே நிறையக் கடன் வாங்கிவிட்டு... பைத்தியக்காரன் மாதிரி நடிக்க ஆரம்பித்தான்.

அது நிஜம் என்று நம்பி அவனை ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் சேர்த்துவிட்டார்கள் சொந்தக் காரர்கள். அவனைக் கொண்டுபோய் ஒரு அறைக்குள் தள்ளிக் கதவை மூடிவிட்டனர். உள்ளே ஒரே இருட்டாய் இருந்தது. இவன் பயந்துகொண்டே மூலையிலே போய் உட்கார்ந்தான்.அந்த சமயம் அங்கே இருந்த இன்னொரு த்தன் மெதுவாக இவன் தோளிலே கையை வைத்தான்.இவன் நடுங்கிப் போயிட்டான். விலகி ஓடினான்.

" என்னைத் தொடாதே... நான் நிஜமாவே பைத்தியம் இல்லை.."ஒரு ஆளுகிட்ட நான் நிறைய கடன் வாங்கிக் கொண்டேன்.. அவனுக்குப் பயந்து போய் இப்படி நடிக்க ஆரம்பித்தேன்.. அவ்வளவு தான்! என்றான்.

"எனக்கு கடன் குடுத்தவன் கூட உன் தொல்லைக்குப் பயந்து பைத்தியம் மாதிரி நடிக்க ஆரம்பித்துவிட்டான் அது தெரியுமா?" என்றான் அந்த ஆள்.

" அது எப்படி உனக்குத் தெரியும்? "என்றான் இவன்.

" நல்லா கவனித்து என் முகத்தைப் பார் நான் தாண்டா அந்த அப்பாவி "என்றான் அவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கன்குளக் காட்டுப்பகுதியில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிப்பு





கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு தெற்கே ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் காடுகள் சூழ்ந்துள்ள பனிக்கன் குளம் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கற்கால மக்கள் வேட்டையாடப் பயன்படுத்திய கற்கருவிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பனிக்கன்குளத்தில் வாழ்ந்து வரும் கஜன், ஜெயகாந்தன் ஆகியோர் காட்டுப் பிரதேசத்தில் உள்ள ஆற்றின் கரையோரத்தில் காணப்பட்ட தானியங்கள் அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதெனக் கருதக்கூடிய கருங்கல்லின் புகைப்படம் ஒன்றை எமக்கு அனுப்பியிருந்தனர். இக்கருங்கல்லின் வடிவமைப்பும், அதன் பயன்பாட்டு நோக்கமும் மிகவும் பழைமைவாய்ந்ததாகக் காணப்பட்டதால் அவ்விடத்திற்குத் தொல்லியல் விரிவுரையாளர் க.கிரிகரனுடன் இவ்வாரம் சென்றிருந்தோம். அவ்விடத்திற்குச் செல்வதற்கான உதவிகளை கஜன், ஜெயகாந்தன் ஆகியோர் செய்திருந்தனர்.

தற்போதைய இக்காட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதிக்கு ஒரு மைல் சுற்றுவட்டத்திலேயே சில குடியிருப்புகள் காணப்படுகின்றன. ஏனைய பிரதேசம் வன்னேரிக் குளம்வரை மக்கள் வாழமுடியாத அடர்ந்த காடாகவே காணப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் நம்பகரமான தொல்லியற் சான்றுகள் ஆற்றின் இரு மருங்கிலும் செறிவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பல அளவுகளில், பல வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்ட ஓடுகள், செங்கற்கள், இரும்பு படிமங்கள், கருங்கற்களில் வடிவமைக்கப்பட்ட பாவனைப் பொருட்கள் முதலியன ஆற்றையண்டிய மேட்டுப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்கள் இலங்கையில் கந்தரோடை, கட்டுக்கரைக்குளம், அநுராதபுரம் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) பண்பாட்டுக்குரிய சான்றாதரங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

ஆயினும் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நிரந்தரமான குடியிருப்புகள் தோன்றுவதற்கு முன்னர் நாடோடிகளாக உணவுக்காக மிருகங்களை வேட்டியாடி வாழ்ந்த கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இங்கு கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. அவற்றை உறுதிப்படுத்தும் நம்பகரமான சான்றுகளாக குவாட்ஸ், சேட் கற்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட சிறுதொழில்நுட்பத்துடன் கூடிய கற்கருவிகளும், கருவிகளை வடிவமைக்கும் போது ஏற்பட்ட கற்களின் பாகங்களும் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தனர் எனக் கூறப்பட்டாலும் இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப்பண்பாட்டிலிருந்தே மனித வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிய முடிகின்றது. அவற்றுள் நாடோடிவாழ்க்கை முறையைப் பின்பற்றிய நுண்கற்காலப் பண்பாடு (இடைக் கற்காலப் பண்பாடு) இற்றைக்கு 37000 ஆண்டிலிருந்து 3000 ஆண்டுகள் நிலவியதாகவும்,நிலையான குடியிருப்புக்களைக் கொண்ட நாகரிக வரலாற்றுக்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டிலிருந்து 1700 வரை நிலவியதாகவும் காலங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன.

இவ்விரு பண்பாடுகளும், அப்பண்பாடுகளுக்குரிய மக்களும் தென்தமிழகத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வந்தவை என்பது தொல்லியலாளர்களின் கருத்தாகும். தற்போது அவ்விரு பண்பாடுகளுக்கும் உரிய சான்றாதாரங்கள் பனிக்கன்குளக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை வட இலங்கையின் பூர்வீக வரலாற்றுக்கு புதிய செய்தியைச் சொல்வதாக உள்ளது. இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இவ்விடத்தை தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கைத் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்-2019

**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

ஜெ.டெஸ்பினா-186, வ.சயந்தினி-179, பி.ஆதிரை-176, ஜீ.கவிசாளினி-175, அ.ஜஸ்வினி-171, ப.கோவிழி-171, ச.நிதுர் ஷன்-169, ம.கிருத்திகா-169, ச.மகிஷா-167, அ.கபீசணன்-165, நீ.சதுசன்-164, தி.அக்ஷயா-163, சி.சிவானுஜா-161, ஸ்ரீ.சங்கீதன்-160, ச.அரவிந்-157, அ.அக் ஷயா-156, கி.பபிநயன்-155, து.மதுஸ்ரி யன்-153.

**யா/கொடிகாமம் திரு நாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை**

சி.ரிவானிகா-191, சி.அனிஸ்வராம்-176, ச.லோனிசா-174, உ.ஆர்த்திகன்-171, யோ. டன்சிகா-169, வி.கவினயா-168, பி.திஷா னுகா-167, சி.சியானுகா- 164, ம.ஜக ன்யா-163, கு.சர்மிலன்-160, ஸ்ரீ.கபீசன்-160, ம.கவின்-160, வ.மாதவி-158, கு.அஜீா- 158, ம.தேனுஜன்-154, ஸ்ரீ.பிரவீன்-153.

**யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

வி.ஆர்சன்-164, சி.அபிஷாந்-154.

**யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்**

க.கபிலன்-166, வி.பூர்ஜா-165, ரா. தனட்சிகா-165, ம.பவ்சிகன்-164, இ.ராம்கு மரன்-161, கி.ரஜினா-157, கோ.கனோஜ்-156, சு.ரஜீத்-155.

**யா/விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை, கரவெட்டி**

நி.நிதுசன்-175, க.திவிஷ்ணா-155, ச.மிதுஷன்-153.

**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

க.அருள்பிரியன்-183, ஆ.அபிராம் -181, ச.புகழினியன்-172, ச.ஆத்மஜன்- 164, ஜெ.ரதுஷன்-158, சு.அஸ்வினி-157

**யா/ எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க. பாடசாலை**

ஆ.கனிஸ்ரன் - 183.வ.காண்டீபன்-168, சொ.கிசோயினி -162

**யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை**

ஜெ.வியாஸ்கன் -169, எஸ்.நிசாத்-156

**யா/குடமியன் அ.த.க.பாடசாலை**

ந.கிருத்திகா-171, ம.கௌசினி -166

**யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்**

ஜெ.ஜனுஸ்ரன் -153

**யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்**

ர.தனிக்சிகா -156

**யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்**

சு.கிசோக்-173, சி.ஆத்மிகா-170,ஜெ.அக்சிதா-167,கு.ஆர்த்திகா-160,க.திசேகன் -158, த.பர்னிகா-157

**யா/போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை**

இ.கனிஸ்ரன் -164,ஜெ.அபினா-160

**யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்**

ஜ.தக்சனா-174, சி.கஜானன்-171

**யா/கச்சாய் மகா வித்தியாலயம்**

சு. டினோஜன் -168, செ.சுகானா-162, இ.நிதர்சினி-157, ச.வவிசர்மி-152

**யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்**

ந.கோபிநாத் -153

**யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை**

சி.சிவானுஜா-162

**யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை**

இரா.சன்சித்-170, சி.யசிந்தன்-166, வி.யொஜேஸ்-157, நி.ஜெனோசியா-155

**யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்**

ஆர்.அட்சிகன்-189, எம்.கேசிகன்-186, எஸ்.நிதர்சனா-186, வீ.ரஷ்மினி-182, எஸ்.திசானா-181, ஏ.அபிஷேக்-180, எஸ்.அக்ஷயா-178, ரி.பூர்வஜன்-176, எம்.வினிஷன்-176, என்.கவிப்பிரியன்-176, வை.அஸ்வின்-173, எஸ்.பிரணவன்-173, ஆர்.ஹரிசிகா-173, என்.அபர்ணன்-173, கே.துவிஷன்-171, ஜே.கம்சிகன்-170, பி.நர்த்தனன்-170, வி.சபீசன்-168, வை.அபிஷா-167, ஆர்.சஸ்மியா-167, எஸ்.டினா-166, ஏ.நிசாழினி-164, எஸ்.பிறேம்நாத்-163, கே.திசாளினி-163, எம்.சாகித்யா-162, என்.டிதுராம்-159, வி.கபிலாஸ்-159, எஸ்.நதுஷன்-159, ஆர்.அஸ்விகன்-159, பி.யக்ஷயா-159, ஆர்.லக்ஷனன்-158, எஸ்.பௌசிகா-157, எஸ்.ரிஷானா-156, எஸ்.ஆதிரன்-156, கே.கிங்ஸ்ரன்-154. ஆர்.அனோஜா-154,

**யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

சு.கபினாஸ் -189, ச.இனியாள் -186, அ.ஆதித்யன்-181, ம.துசாலினி-180, கு.மதுஜனன்-179,க.ஹேசிகா-179, ச.ஹரிசாந் -177,பா.சுவேதன்-177, சி.துசாந் -176, பி.டினுசாந்-173, சி.பிரவீன்-172, பி.தீபிகா-172, க.கபினயன்-172, ம.விசாகன் -171, றோ.அக்சிகா-170,ச.கௌரீசன்-170, ந.மிதுசிகன்-170, கி.யெவ்வனி-169, சி.மதுர்சிகா-169,கு.அபியுக்சன்-167, ந.டினோஜன்-166,த.நிதுஜன்-164, கெ.மேதவன்-162,ஆ.தஸ்மி -162, ர.அஜித்ரா -162, ய.குகப்பிரியா-161, சு.சுருதிகா-161, ம.மதுசன் -161, கி.சுஜானி -161, ச.ஹர்சிகா-161, கு.சேசிகன் -161,ஜெ.அபினாஸ் -159, ஜோ.விபூசன்-159,ஜெ.பிரஜித்-158, தெ.யதுமதி -157,அ.அக்சயா -156, து.பிரவீன்-156,சி.லதுமிதா-155, ஜெ.கோவர்ணன்-154,கோ.சண்முகி-153, உ.டானியல்-153.

**யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்**

கு.ஜதுஷன்-184, ர.நிஷானா-175, த.கபிஷாலினி-171, பு.மதீஸ்-170, ஞா.நிசாந்தன்-168, தி.பிரித்திகன்-168, செ.லக்சனா-167, ப.நிலுஜா-167, த.அகீரா-166, கி.வர்ணிகா-166, ரா.கர்ணி-165, சூ.ரிஷாந்-163, கி.கிரிசிகன்-162, ம.மாதங்கி-161, சி.துசிகரன்-160, கி.மேனகன்-160, ஜீ.லக்சயன்-157, ச.கஜானனன்-155, ம.லதுஷன்-154. (இ-30-105-114)

**கண்ணீர் அஞ்சலி**



**திருமதி.பரமேஸ்வரி குகராஜன்**

எமது கல்லூரியின் ஆசிரியர் செல்வி. தயாளினி குகராஜன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி.பரமேஸ்வரி குகராஜன் அவர்கள் அமரத்துவம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரிச் சமூகம்
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம்-பகுதி II

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

05



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

உண்மையிலே பல்வேறு மட்ட அரசாங்கங்களுக்கிடையிலான இயலுமைகளின் நிரலை வடிவமைப்பதில் எல்லா சந்தேகங்களையும் நீக்குவது சாத்தியமானதல்ல. அதிகாரப் பங்கீடு செய்யப்பட்ட முறைமைகளை நடைமுறைப்படுத்துவதில் இயலுமைகள் குறித்த இவ்வாறான பிணக்குகள் எழுவது இயற்கையே. முதல் கட்டத்திலேயே நிர்வாகச் செயன்முறைகளின் ஊடாக வேண்டிய தீர்மானங்களை உருவாக்கி அவைகளை நீதிமன்றங்கள் ஊடாக இறுதிப்படுத்த வேண்டும். ஆனாலும் 9 ஆம் நிரல்களின் 3 நிரல்களின் வடிவமைப்பானது தெளிவு மற்றும் நுணுக்கத்தன்மை விடயங்களில் நிறையவே செய்ய வேண்டியதாக சொல்லப்படுகிறது. விளைவு என்னவெனில் அநேகமாக நீதிமன்றமானது பிரச்சினைகளைத் தீர்க்கும்பொழுது சௌகரியமாக மத்திக்கு சார்பாக தீர்மானம் எடுக்கச் சொல்ல வழிவகுக்கிறது. மாகாணசபை நிரல் 1 ஆனது 37 விடயங்களை பிரித்துக்கூறுகிறது. அவற்றுள் பலவற்றுக்கு உப விடயங்கள் கொடுக்கப்பட்டு அவ் விடயங்களின் வீச்சுக்களும் எல்லைகளும் குறித்துரைக்கப் படுகிறது. மாகாணசபைகள் மீது பகிரப்பட்ட சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்களை இவைகள் தருகின்றன. 3 முக்கிய விடயங்கள் மேலும் 3 பின்னிணைப்புகளாக மாகாண சபை நிரலின் ஒரு பகுதியாக விபரமாகத் தரப்படுகின்றன. சட்டமும் ஒழுங்கும் (பின்னிணைப்பு 1) காணிக்குடியமர்வும் (பின்னிணைப்பு 2), கல்வி (பின்னிணைப்பு 3), காணி மீதான அதிகாரம் பொலிஸ் என்பன தமிழ் தேசியவாதிகளால் குறிப்பாக முக்கியமான இயல்புடையனவாகக் காட்டப்பட்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சுய ஆட்சி கோரப்பட்டிருந்தது. ஆனாலும் நாட்டின் எல்லா இடங்களிலும் மாகாணசபை தொழிற்பாட்டை 20 வருடங்களாகக் கொண்டிருந்த அனுபவத்தில் பொலிஸ், காணி, நிதி மற்றும் சுகாதாரம் கல்வி மற்றும் கமநல சேவைகள் விடயங்களை அமுல்படுத்துவதில் முழு சுயாதிக்கம் விரும்பப்படுவது தெளிவாகிறது" இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்ட "கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தை பகிர்தல்" என்னும் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

### சட்டமா அதிபரின் ஆலோ சனைக்கு அனுப்பப்படுதல்

மாகாண சபை நிரல், ஒதுக்கிய நிரல் மற்றும் ஒருங்கிணை நிரல் மூன்றிலும் உள்ள விடயங்களில் பல ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு காணப்படுவதால் பல சிக்கல் நிலையைத் தோற்விப்பதோடு, அவ்விடயங்கள் சம்பந்தமாக இயற்றப்படும் நியதிச் சட்டங்கள் எப்போதும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுகிறது.

மாகாண சபை உருவான ஆரம்பத்தில் நியதிச் சட்ட வரைபுகள் உருவாக்கப்படும் போது மாகாண சபைகளில் சட்ட அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அந்நியதிச் சட்ட வரைபுகள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து ஆலோசனை பெறும் ஒரு பாரம்பரியம் இருந்தது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தொடர்ந்தது. ஆனால்1991ஆம்ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் நியதிச் சட்ட வரைபுகள் ஆளுநரின் ஒப்புதல் பெற அனுப்பப்படும் போது ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்குமுன் அதனை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து அவரின் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டி ருந்தது. இச் சுற்றறிக்கை எவ்வளவு தூரம் வலிதானது என்பது தெரியவில்லை.

ஒருங்கிணை நிரலில் பல நல்லவிடயங்கள் உள்ளன. அவ் விடயங்களில் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நியதிச் சட்டங்களை ஆக்கிக்கொண்டால் மாகாண சபைகளை திறம்பட நடத்த முடியும். வடமேல் மாகாண சபையின் முதலாவது முன்னாள் முதல் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா 2013இல் ஒரு பேட்டியில் கூறிய தனது அனுபவக் கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அவர் கூறியதாவது "நீங்கள் ஒரு போதும் நம்பமுடியாத ஒரு கருத்தை நான் இங்கு கூற முடியும். அதாவது நான் முதலமைச்சராக கடமையாற்றிய காலப் பகுதியில் மத்திய அரசு எந்தவொரு அதிகாரத்தையும் எமக்குப் பகிரவில்லை.

எனக்கு கிடைத்த மாகாண சபையானது புதிதாகப் பிறந்த குழந்தையைப் போன்று இருந்ததோடு, வருமானங்களை பெறும் வழிகள் தொடர்பாக சிந்திக்க அதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டியிருந்தது.

அந்த விடயங்களை உரிய முறையில் செய்ததன் காரணமாக எனக்குத் தேவையான அதிகாரங்கள் என்னைத் தேடி வந்தனவே ஒழிய நான் சிறிகொத்தவிற்கோ ஜனாதிபதி மாளிகைக்கோ சென்று அதிகாரம் வேண்டி பிச்சை கேட்கவில்லை. இதை எனது முயற்சிகளுக்கு உறுதுணையாகவிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அனுபவமிக்க அலுவலர்கள் சாட்சி பகர்வார்கள்.

மேலும் ஒரு விடயத்தை நான் தெரிவிக்க வேண்டும். அதாவது மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை பாதுகாப்பதற்கு நான் பின்பற்றிய செயற்பாடுகளாகும். மாகாண சபைகள் பற்றி அறிந்தவர்களுக்கு அது புதிய விடயமாக இருக்கவில்லை.

ஆனால் அதன் ஆரம்ப உறுப்பினர்களாகிய நாம் இன்னோரான விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இன்று பெரும்பாலான மாகாண சபைகள் சிந்திப்பது இடை நேர் விளைவுகள் காணப்படுவதால் மாகாண சபைகளுக்குரியதான சட்டங்களாக உருவாக்கிக் கொள்ளத் தேவையில்லை என்றவாறே. இதை உறுதிப்படுத்தக்கூடிய சிறந்த விடயம் யாதெனில், மூன்று தசாப்தகால வரலாற்றைக் கொண்ட மாகாண சபைகள் இதுவரையில் மிகக் குறைந்த அளவு நியதிச் சட்டங்களையே உருவாக்கியிருக்கின்றன.

அனைத்து மாகாண சபைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நியதிச் சட்டங்களைக் கூட்டினால் அது 500க்கு உட்பட்டே இருக்கும்.

அதுவும் வருடாந்தம் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிதி (குறை நிரப்பிச் ) சட்டங்களையும் சேர்த்தே அது அமையும். ஆயினும் வடமேல் மாகாண சபைக்கு நான் தலைமைத்துவம் வழங்கிய சபை இந்த செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்ட அதேவேளை, வருமானத்தை ஈட்டக்கூடிய அனைத்து பிரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி சட்டங்களை தயாரித்து உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகளை எடுத்தது.

நாம் அங்கு மாகாண சுற்றாடல் அதிகார சபையை உருவாக்கிய போது அதற்கு உரிய அமைச்சிடமிருந்து பாரிய எதிர்ப்பு எழுந்தாலும் அதையும் கட்டுப்படுத்தி உரிய சட்டங்களை உருவாக்கிக்கொள்ள முடிந்த தன் காரணமாக இன்றும் வடமேல் மாகாண சபைக்கு வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு வழியாக அது இருக்கின்றது.

மாகாண சபையின் ஆரம்ப உறுப்பினர்களாகிய நாம் இன்னோரான விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது- காமினி ஜயவிக்ரம பெரேரா.



*காமினி ஜயவிக்ரம பெரேரா வடமேல் மாகாண சபையின் முதலாவது முன்னாள் முதல் அமைச்சர்*

மாகாண சபை உருவான ஆரம்பத்தில் நியதிச் சட்ட வரைபுகள் உருவாக்கப்படும் போது மாகாண சபைகளில் சட்ட அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அந் நியதிச் சட்ட வரைபுகள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து ஆலோசனை பெறும் ஒரு பாரம்பரியம் இருந்தது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தொடர்ந்தது. ஆனால் 1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம்திகதி அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் நியதிச் சட்ட வரைபுகள் ஆளுநரின் ஒப்புதல் பெற அனுப்பப்படும் போது ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்குமுன் அதனை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து அவரின் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு அச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இச் சுற்றறிக்கை எவ்வளவு தூரம் வலிதானது என்பது தெரியவில்லை.

நான் முதலமைச்சராக கடமையாற்றிய காலப் பகுதியில் மத்திய அரசு எந்தவொரு அதிகாரத்தையும் எமக்குப் பகிரவில்லை. விடயங்களை உரிய முறையில் செய்ததன் காரணமாக எனக்குத் தேவையான அதிகாரங்கள் என்னைத் தேடி வந்தனவே ஒழிய நான் சிறிகொத்தவிற்கோ ஜனாதிபதி மாளிகைக்கோ சென்று அதிகாரம் வேண்டி பிச்சை கேட்கவில்லை. மூன்று தசாப்த கால வரலாற்றைக் கொண்ட மாகாண சபைகள் இதுவரையில் மிகக் குறைந்த அளவு நியதிச் சட்டங்களையே உருவாக்கியிருக்கின்றன. - முன்னாள் முதல் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா

ஒதுக்கிய நிரலுடன் ( நிரல் II) தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் (நிரல் I) உள்ள விடயங்கள் (ஒன்பதாம் அட்டவணையிலுள்ள நிரல் –I ன் விடய இலக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | மாகாண நிரல் | மாகாண விடயம் இல. | ஒதுக்கிய நிரல் |
|---|---|---|---|
| 1 | பொலிசும் பொது ஒழுங்கும் | 1 | உள்நாட்டு பாதுகாப்பு |
| 2 | உள்ளூராட்சி | 4 | உள்ளூராட்சி மன்றத் தேர்தல் |
| 3 | வீதிகள் பாலங்கள் அமைத்தல் | 6 | பெருந்தெருக்கள், பாலங்கள் |
| 4 | போக்குவரத்துச்சேவைகள் | 8 | தேசிய போக்குவரத்து |
| 5 | காணி | 18 | காணி வளங்கள் |
| 6 | அபிவிருத்தியும் திட்டமிடலும் | 21 | தேசிய கொள்கையும் திட்டமிடலும் |
| 7 | நூலகங்கள், புராதன சின்னங்கள் | 25 | தேசிய சுவடிக்கூடம், புராதன சின்னங்கள் |
| 8 | கனிப்பொருள் வளம் | 26 | கனிப்பொருள்களும் சுரங்கங்களும் |
| 9 | கூட்டுத்தாபனங்கள் | 27 | கூட்டுத்தாபனங்கள் மீதான வரிகள் |
| 10 | நியதிச் சட்டங்களுக்கு எதிரான தவறுகள் | 32 | சட்டங்களுக்கு எதிரான தவறுகள் |

ஒருங்கிணை நிரலுடன் ( நிரல் நிரல் III ) தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் (நிரல் I) உள்ள விடயங்கள் (ஒன்பதாம் அட்டவணையிலுள்ள நிரல் –I மற்றும் நிரல்- III ன் விடய இலக்கங்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.)

| | மாகாண நிரல் | மாகாண நிரல் விடயம் இல. | ஒருங்கிய நிரல் விடயம் இல. |
|---|---|---|---|
| 1 | திட்டமிடல் | 2 | 1 |
| 2 | கல்வியும் கல்விச் சேவைகளும் | 3 | 2,3 |
| 3 | வீடமைப்பும் நிர்மாணமும் | 5 | 5 |
| 4 | சமூகசேவை, புனர்வாழ்வு | 7 | 7 |
| 5 | கமத்தொழில் கமநலச் சேவை | 9 | 8 |
| 6 | சுகாதாரம் | 11 | 9 |
| 7 | கூட்டுறவுகள் | 17 | 15 |
| 8 | நீர்ப்பாசனம் | 19 | 17 |
| 9 | விலங்கு வேளாண்மை | 20 | 20 |
| 10 | புராதன சின்னங்கள் | 25 | 34 |
| 11 | விளையாட்டு - அபிவிருத்தி | 29 | 13 |
| 12 | நியதிச் சட்டம்- எதிரான தவறுகள் | 32 | 25 |
| 13 | மின்வலுவைத் தோற்றுவித்தல் | 34 | 32 |
| 14 | சூழல் பாதுகாப்பு | 37 | 33 |

**தொடரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி விரதம் இன்று ஆரம்பம்



கைங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரம சிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கிறார். அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பயபக்தியோடு விசித்திர விகட நாடக மொன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கிறார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கின்றார். பரம சிவனது அனுக்கிரகமும் கிடைக்கின்றது. அதனைக் கண்டு சபையோர் பிருங்கி மகரிஷியை பாராட்டுகின்றனர் .அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கி பரம சிவனை வலம் வந்து வணங்குகிறார்.

இதனால் பார்வதிதேவி கவலையடைகிறார். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் தேவி! சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்தி நிலையை விரும்பி நிற்பவர். அதனை அடைவதற்கு என்னை வணங்குவதால் பிரயோசனமில்லை என்ற திட சித்தம் கொண்டார். அதனால் உன்னை விட்டு என்னை மாத்திரம் வண ங்கிச்சென்றார் என்று பார் வதிக்கு விளக்கினார்.

பார்வதியும் வருத்தப்பட்டு பரமசிவனிடம் கோபம் கொள்கின்றாள். கோபாவேசத்தால் தனது சக்தியின் கூறுகள் பிருங்கி மகரிஷியினின்றும் அகலக் கடவது என்று கூறிவிடுகின்றார். பிருங்கி மகரிஷியின் இரத்தம் பிழிந்து சக்கையாகின்றது. அவர் நிற்பதற்கு முடியாது தள்ளாடுகின்றார்.அப்பொழுது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கிறார். பிருங்கி தண்டின் உதவியுடன் போய் சேர்கின்றார்.

தேவிக்கு மேலும் கோபமுண்டாகிறது. கைலையை விட்டு நீங்கி பூலோகத்திற்கு வருகின்றார். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கும் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கின்றாள். அந்த இடத்தில் 12 வருடங்கள் மழையின்றி கிடந்த விருட்சங்கள் எல்லாம் தளிர்த்து பூத்து மணம் வீசுவதை கண்டு அதிசயிக்கின்றனர்.

தேவி தாங்கள் கைலையை விட்டு பூலோகத்திற்கு எழுந்தருள காரணம் என்னவென்று கேட்டு விடுகின்றார்.தேவி தான் பூலோகத்திற்கு வந்த கதையைச் சொல்கிறார். தேவியும் ஆச்சிரமம் சென்று வான்மீகி தேவிக்கென்று அமைத்து கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின பீடத்தில் அமர்ந்து நான் விரதமொன்று அனுஷ்டிக்க வேண்டும். இருக்குமேயானால் அதனை கூறுங்கள் என்றார்.

மகரிஷி தாயே! தாங்கள் விரதமுகத்தோடு எழுந்தருளி இருக்கின்றீர்கள். அதனை விடவா பூலோ கத்தில் சிறந்த விரதமொன்று உண்டு எனக்கூற, தேவி புன்னகைத்து தன் விரதத்தினை ஆல விருட்சத்தின் கீழ் அமர்ந்து ஆரம்பிக்கின்றேன்.மண்ணிலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாக பாவித்து பூஜை செய்கின்றாள். 21 நாள் பூஜை நிகழ்கின்றது. 21 பழம், 21அதிரசம், 21வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை நைவேத்தியமாக வைத்து தூபம் காட்டுகிறாள். காப்பு அணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து தேவி! உனக்கு என்னவரம் வேண்டுமென்று கேட்கிறார்.

தேவி ஈசனைப் பார்த்து உமது தேகத்தில பாதி எனக்கருள வேண்டுமென்று கேட்கின்றாள். ஆகட்டும் என்கிறார். ஈஸ்வரனும் என்னை நோன்பு நோற்று வரம் பெற்று உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் உன்மூலம் சகல சௌபாக்கியத்தையும் அடைவர் என்று வரமும் நல்கி பார்வதி சமேதராய் அர்த்த நாரீஸ்வரர் கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோக வாசிகளால் கௌரி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த கௌரி நோன்பை அனுஷ்டித்து கைமேல் பலன் கண்ட பலர் இவ் விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை. சங் கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை, வலம் வருதல் என்பனவாகும்.

எனவே இவற்றை ஒவ் வொருவரும் தாமாகவே செய்து விரதத்தினை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். விரும்பினால் தங்கள் இல்லங்களிலும் இதனை செய்யலாம்.

ஆனால் புனித சூழ்நிலை அமைய வேண்டும். லிங்க அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது. 21 நாட்கள் இவ் விரதத்தினை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதிநாளில் எல்லாப் பூஜைகளையும் முடித்துக் கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

கலாபூஷணம்.
க. லோகேஸ்வரன்
தொல்புரத்தூர்

# நவராத்திரி பூஜையின் வெற்றித்திருநாளாகிய விஜயதசமி இன்று



விகாரி வருடம் 2019 ஆம் ஆண்டிற்குரிய நவராத்திரி பூஜையின் வெற்றித் திரு நாளாகிய விஜயதசமி தமிழ் புரட்டாதி 21 ஆம் நாள் 08.10.2019 செவ்வாய்க்கிழமை இன்று உலக நாடுகளில் உள்ள இந்துக் கோவில்களிலும் ,பொது இடங்கள்,கல்வி நிலையங்கள்,பாடசாலைகள் ஆகிய இடங்களில் மிகவும் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படு கின்றது. அண்ட,புவன போகங்களை எல்லாம் கட்டிக்காத்து உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபரா சக்தியாகிய அம்பிகைக்குரிய நவராத்திரி பூஜை முடிந்து பத்தாம் நாள் ஆகிய இன்று விஜயதசமி கொண்டாடப்படு கின்றது. இந்த பத்து தினங்களும் அம்பிகையை பல்வேறு வடிவங்களில் எழுந்தருளச் செய்து இந்து மதத்தவர்கள் வழிபாடு செய்வர். முதல் மூன்று நாட்களும் துர்க்கா பூஜையும் அடுத்த மூன்று நாட்களும் லக்ஷ்மி பூஜையும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி பூஜையும் இடம் பெற்று இறுதி நாளாகிய 10 ஆம் நாள் இன்று விஜயதசமி பூஜை இடம் பெறுகின்றது.

விஜயதசமி என்பது இரு பெரும் கைங்கரியங்க ளுடன் தொடர்புபட்டு உள்ளது. வித்தியாரம்பமும் விஜயதசமி பூஜையும் , இரண்டாவது இந்துக் கோவில்களில் நடைபெறும் மானம்பூ திரு விழா மாலை நடத்துதல் சிறப்பைத் தரும். தசமி திதி மாலை 5.39 மணியுடன் முடிவடைவதால் அதற்கு முன் மகிடாசூர சங்காரம் செய்ய வேண்டும்.

ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில் இருகைகளிலும் தாமரைகள் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து முறையே அருள், பொருள் பாலிப்பவள் லக்ஷ்மி. ஒரு மனிதனின் உடல் வளர்ச்சிக்கும்,மன வலிமைக்கும் வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் அறிவும் மிக அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீ துர்க்கா தேவியையும், வாழ்க்கைக்கு தேவையான செல்வத்தை நல்க வல்ல சக்தியாகிய ஸ்ரீ மகா லக்ஷ்மியையும் அறிவை யும் , ஆற்றலையும் தரவல்ல கல்வியின் அதிபதியாகிய ஸ்ரீ சரஸ்வதியையும் நாம் இந்த நவராத்திரி வாரத்திலே வழிபட்டு அந்தத் தேவியரின் கிடைத்தற்கரிய அருள் பேற்றைப் பெற்று முறையே வீரம், செல்வம்,கல்வி ஆகிய மூன்றையும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே இந் நவராத்திரி விரதமாகும்.

ஆய கலைகள் அறுபத்தி நான்கிற்கும் கலைத் தெய்வமாகிய சரஸ்வதி தலைமை தாங்குகிறாள். கல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் பிறருக்குக் கொடுக்கக் குறைந்து கொண்டே செல்லும். கல்வி பெருகிக் கொண்டே செல்லும்.

எனவே மாணவச் செல்வங்கள் கலைத் தெய்வமாகிய சரஸ்வதிதேவியை விஜயதசமி நன்னாளிலே வணங்கி பிறந்த பொன் நாட்டிற்கும், பெற்றோர்க்கும் சேவை செய்து நல்லவர்களாக வாழ்ந்து கல்விச் செல்வத்தை தமதாக்கி மனிதப் பிறவி எடுத்ததன் நற்பயனை அனு பவித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ் வீராக !

கலைஞாயிறு
கந்தையா-கனக சபை

# வாகனப் பாதுகாப்பு தரிப்பிடத்தின் நடைமுறையால் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபையின் வாகனப் பாதுகாப்பு நிலையத்தின் பற்றுச்சீட்டு நடைமுறையால் பொதுமக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாவதாக குற்றம் சாட்டப்பட்டது.

குறித்த பாதுகாப்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய பிரதேச சபைகளிலோ அல்லது நகரசபைகளிலோ பின்பற்றப்படாத நடைமுறையான வாகனத்தை எடுக்க வரும் போது பற்றுச் சீட்டு வழங்கப்படுகின்றமையால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். வாகனத்தை பாதுகாப்புத் தரிப்பிடத்தில் நிறுத்துபவரின் வாகனத் திறப்பு தொலையும் சந்தர்ப்பத்தில் வேறொருவர் குறித்த திறப்பை எடுத்து வந்து பற்றுச் சீட்டைப் பெற்று வாகனத்தை எடுத்துச் செல்லும் நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது.

எனவே பாதுகாப்புத் தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்துவோரிடம் முன்கூட்டியே பற்றுச்சீட்டை வழங்கினால் திருட்டுக்களைத்தவிர்த்துக் கொள்ளலாம் என மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த பாதுகாப்புத் தரிப்பிடத்தில் போதிய பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதுடன் அதிகாலை வேளையில் குறித்த பாதுகாப்புத் தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பற்றுச்சீட்டு வழங்குவதில் சிரமம் ஏற்படுவதாகத் தெரிவித்தார். (இ-5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு இந்திய அரசு 50,000 வீடுகள் வழங்கும்

## சஜித்திற்கு சுஜீவ ஆதரவு

(ஹற்றன்)

இலங்கையில் ஊழலற்ற ஆட்சி ஒன்றைக் உருவாக்கக் கூடிய தகுதியானவரான சஜித் பிரேமதாஸவைப் போன்ற ஒருவர் ஆட்சிக்கு வருவாரேயானால் இலங்கையில் மேலும் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான நிதியை இந்திய அரசாங்கம் வழங்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்ததாக அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

சஜித்துடன் நாட்டை வெற்றி கொள்ளும் போராட்டம் என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஹற்றனில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவிடம் காணப்படுவது இனபேதம் மாத்திரமே, நாட்டில் யுத்தம் முடிந்தபின்பு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மீது அக்கறையாக இருப்பதைப் போல் எவ்வளவு பொய் கூற முடியுமோ அவ்வளவு பொய்களைக் கூறினார்.

இவ்வாறு பொய் கூறிய பொய்யான அக்கறையை வெளிப்படுத்தும் மகிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் மலையக மக்களையும் ஏமாற்றினார். அவர்களின் நோக்கம் இந்த நாடு ராஜபக்ஷக்களின் நாடு என்பதைக் காட்டிக்கொண்டு ஹிட்லர் போன்றவர்களின் ஆட்சியைக் கொண்டு வருவதேயாகும்.

இதனையே அவர்கள் அதிகமாக விரும்புவதைக் காணக் கூடியதாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கடந்த காலங்களில் வெளிநாடு ஒன்றுக்கு சென்றபோது அங்கே பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் எம்மைச் சந்தித்தனர்.

அதன்போது எம்மிடம் வினவினர் உங்கள் நாட்டு தலைவர் யார் என்று, அப்போது மகிந்த ராஜபக்ஷ என்று கூறினோம். நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் யார் என்று கேட்டனர் அதற்கு கோத்தபாய ராஜபக்ஷ என்று தெரிவித்தோம். பொருளாதார அமைச்சர் என்று கேட்டனர் அதற்கு நாங்கள் பசில் ராஜபக்ஷ என்று கூறினோம். நாட்டின் பாராளுமன்ற சபாநாயகர் யார் என்று கேட்டனர் சமல் ராஜபக்ஷ என்று கூறினோம். உங்கள் நாட்டின் முதலமைச்சர் யார் என்று கேட்டனர் சசிந்திர ராஜபக்ஷ என்று கூறினோம்.

அதேபோன்று இளம் உறுப்பினராக நாமல் ராஜபக்ஷவும் இருக்கிறார் என்று கூறினோம். அதற்கு அவர்கள் உங்கள் நாட்டில் ஏனைய தலைவர்களும் ராஜபக்ஷர்களா?எனக் கேள்வி எழுப்பினர்.

ஆனால் இதன்போது இந்த நாட்டில் குடும்ப ஆட்சியினரைப் போல் இவர்கள் ராஜபக்ஷக்கள் செயற்படுவதாக அவர்களுக்கு விபரித்தோம் எனத் தெரிவித்த சுஜீவ,

இந்த நாட்டில் ராஜபக்ஷ அரசு வந்ததன் பின்பு ஏனையவர்கள் தலைநிமிர்ந்து செல்லக்கூடாது என்ற ஹிட்லர் போலவே ஆட்சியைக் கொண்டு செலுத்த முனைந்தனர். இதனைக் கட்டுப்படுத்தவே இந்த அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளர் ஊடாக கைப்பற்றியது. இன்று மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தல் வந்துள்ளது. அதில் சஜித் பிரேமதாஸ போட்டியிடுகின்றார். இவர் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவரை வெற்றியடைய செய்வதில் அனைத்துத் தரப்பினரும் உறுதியாக இருக்கின்றனர். அதேபோன்று மலையக மக்களும் உறுதியாக இருந்து அவரை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

அதற்காக அமைச்சர் பழனி திகாம்பரத்தின் கீழ் இயங்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இந்தத் தேர்தல் செயற்பாடுகளுக்கு மக்கள் ஆதரவை வழங்கி ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிசெய்ய கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# எரிவாயு சிலிண்டரின் விலையை 600 ரூபாவால் குறைக்க முடியும்

## வாசுதேவ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தற்போது காணப்படும் பொருளாதார நிலையில் 12.5 கிலோகிராம் லிட்றோ எரிவாயு சிலிண்டரின் விலையை சுமார் 600 ரூபாவால் குறைக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தற்போது அரசாங்கத்தால் எரிவாயுவின் விலையும், வேறு பொருட்களின் விலைகளும் குறைக்கப்படுவதற்கான காரணம் சிறுபிள்ளைக்குக்கூடப் புரியும்.

எனக்குத் தெரிந்த பொருளாதார நிபுணர் ஒருவரின் கருத்தின் பிரகாரம் தற்போது காணப்படும் பொருளாதார நிலையில் 12.5 கிலோகிராம் லிட்றோ எரிவாயு சிலிண்டரின் விலையை சுமார் 600 ரூபாவால் குறைக்க முடியும்.

எனினும் அரசாங்கம் சுமார் 200 ரூபாவையே குறைத்திருக்கிறது. அத்தோடு எரிபொருள் விலையை 25 ரூபாவால் குறைக்க முடியும். எனவே தேர்தலை இலக்காகக் கொண்டே அரசாங்கம் இவ்வாறான பொய்யான விலைக்குறைப்புக்களை செய்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள வியத்மக அமைப்பில் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை கோத்தபாய ராஜபக்ஷவின் இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்தை தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி சர்ச்சையை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்தது.

எனினும் அது குறித்து அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக அவர்களுடைய திட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும்வாசுதேவ மேலும் தெரிவித்தார். (இ-7)




# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1852

### வர்ணன்

நீங்க மட்டும் போற மாதிரி இஷ்டத்திற்கு வண்டி ஓட்டுறீங்க... லேணர்ஸ்ல சொல்லித் தரலையா ரூல்ஸ் எல்லாம். போங்கண்ணே அதெல்லாம் படிச்சு எக்ஸாம் எழுதினதோட சரி அண்ணே. ஆசைக்கு ட்ரை கூட பண்ணிப் பார்த்ததில்லை



### கம்சன்

கொஞ்சம் இடைவெளிவிட்டு தொடருங்கள் வாகனத்தை மட்டுமல்ல உறவுகளையும் தான்... வாழ்க்கையில் எல்லா உறவுகளும் நல்லபடியாக கடைசிவரை நீடிக்க வேண்டுமெனில் சிறு இடைவெளி அவசியம்



### ஹரி

மனசு சரியில்லைன்னுதான் கோயிலுக்குப் போறோம்... ஆனா அங்கேயும் சர்க்கரைப் பொங்கல் கிடைக்கலைன்னா அப்புறம் என்ன வாழ்க்கை இது



### ஆதித்யா

அரவிந்த சாமியை இன்றைக்கு நேற்றா வில்லனா பார்க்கிறோம்! மாப்ள அரவிந்தசாமி மாதிரி இருப்பாரா என்று கேட்க ஆரம்பிச்சதில இருந்தே அவர் வில்லன்தான்



### ஈசன்

வாழ்க்கையில் நாம் இன்னொருவரைப் போல இருக்கவேண்டும் என நினைக்கக்கூடாது. நமக்கான அடையாளத்தை நாம் தான் உருவாக்க வேண்டும்



### மகேஸ்

வாழ்க்கை ஒரு படகு ஆகும். அதை முறையாகக் கற்றவர்கள் கரையை அடைந்து விட்டனர். அரை குறையாகக் கற்றவர்கள் இன்னும் மிதக்கின்றனர்.. அதைப் புரிந்து கொள்ளத் தெரியாதவர்கள் மூழ்கி இறக்கின்றனர்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்காக பிரிட்டனில் போராட்டம்

(லண்டன்)

**இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்காகப் பிரித்தானியாவில் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.**



நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் பிரித்தானியாவில் டவுனிங் வீதி இலக்கம் 10 இல் நண்பகல் 12 மணி தொடக்கம் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இறுதிப் போரின் போது கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கும், போரின் போது திட்டமிடப்பட்டு பௌத்த சிங்களப் பேரினவாத அரசால் கொல்லப்பட்ட அப்பாவி சிறுவர்களுக்கும் நீதி கோரி, இலங்கை அரசை பதில் கூற வலியுறுத்தியும் இக்கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நீதியை நிலைநாட்ட பிரித்தானியா இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதில் நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்கள், புலம்பெயர் தமிழர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7-250)





## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் மீள் திருத்தம் செய்ய விரும்புவோருக்கான அறிவித்தல்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் திருத்தத்துக்காக எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன. பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் இணையத் தளமான www.doenets.lk என்ற முகவரியில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டது.

அத்துடன் பரீட்சைப் பெறுபேறுகளில் மீள்திருத்தம் செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை அதற்காக பாடசாலை அதிபர் ஊடாக மேன்முறையீடு செய்யலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு திணைக்களத்தின் 011-278 4208, 011 278 4537, 011-318 8350 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் திணைக்களம் அறிவித்தது. (இ-7)

## சம்மாந்துறை விபத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு!

(சம்மாந்துறை)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

தனியார் பேருந்தொன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று நேருக்கு நேர் மோதியமையினால் குறித்த விபத்து இடம்பெற்றது.

இதில் நிந்தவூரைச் சேர்ந்த 35 வயது 4 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கிழக்கில் இந்தியத் துணைத் தூதரகம் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம்

### முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து

(ஏறாவூர்)

"இந்திய அரசின் நிதியுதவி மூலமாகப் பலாலி விமான நிலையம் சர்வதேச தரத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் எனப் போக்குவரத்து அமைச்சு பெயரிட அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டதோடு விமான சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரிய அம்சமாகும். இதேபோன்று கிழக்கில் இந்தியத் துணைத் தூதரகம் ஒன்றும் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமாகும்" என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த அவரின் செய்திக் குறிப்பில் பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு விமான நிலையம் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் எனவும் இரத்மலானை விமான நிலையம், இரத்மலானை சர்வதேச விமான நிலையம் எனவும் பெயர் மாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் தற்போது தென்னிந்தியா - யாழ். - மட்டக்களப்புக்கான விமான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலமாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமான விமான சேவைகள் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு வரப்பிரசாதங்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் தமது இந்தியப் பயணத்துக்கான விசாமற்றும் வர்த்தக தொடர்பாடல்களை மேற்கொள்வதில் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது வடக்கு மாகாணத்தில் இந்தியத் தூதரகத்தின் துணை அலுவலகம் அமையப் பெற்றுள்ளதால் இவ்விடயங்களை அங்குள்ள மக்கள் பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலை கிழக்கிலும் ஏற்பட வேண்டும்.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் உட்பட வெளிவிவகார அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் பலரையும் நேரில் சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். இது விடயத்தில் அவர்கள் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில்தற்போது விமான நிலையப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுவரும் நிலையில் உடனடியாக கிழக்கில் துணைத் தூதரகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பணியை இந்திய அரசு உடன் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 130 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 300 |
| தக்காளி | 140 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 20 | 60 |
| கோவா | 160 | 120 | 120 |
| கரட் | 150 | 40 | 140 |
| பூசணி | 100 | 80 | 80 |
| புடோல் | 180 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 240 | 200 |
| பாகற்காய் | 350 | 100 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 180 | 180 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 |
| பீற்றூட் | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | .200 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | .— | 100 |
| கீரை -1பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 20-40 |
| இராசவள்ளி | — | 400 | — |
| வெங்காயப்பூ | 25 | — | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

# உழைத்தால்தான் உயிர் வாழலாம்


சோம்பேறிகளுக்குச் சோறு கிடையாது என்று சுண்டெலிகளிடம் சொல்கிறது சேவல்.

ஒரு ஊரில் ஒரு சேவலும் இரண்டு சுண்டெலிகளும் வசித்து வந்தன.

சேவலின் பெயர் பொன்குரல்; ஒரு சுண்டெலியின் பெயர் சேது; மற்றொரு சுண்டெலியின் பெயர் மாது.

சேதுவும் மாதுவும் எப்போதும் ஒரு வேலையும் செய்வதில்லை. பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டுமே பொழுதுபோக்கின. ஆனால் பொன்குரல் அதிகாலையில் எழுந்து அனைவரையும் எழுப்பி, அவர்களை வேலைக்கு அனுப்பி வைக்கும். தானும் தன் கடமையில் ஈடுபடும்.

ஒருநாள் காலை சேவல் வயல்பக்கம் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது சில நெற்கதிர்கள் கிடைத்தன.

உடனே அவற்றைச் சேவல் எடுத்து வந்தது. வீட்டிற்கு வந்ததும் தன் நண்பர்களான சேது, மாது இருவரையும் கூப்பிட்டு ''நண்பர்களே... இங்கு ஓடி வாருங்கள். எனக்கு என்ன கிடைத்திருக்கிறது என்பதைப் பாருங்கள்'' என்றது. மேலும் ''இந்த நெற்கதிர்களை நாம் அடித்து நெல்லை வேறாக எடுக்கவேண்டும். இந்த வேலையை யார் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டது.

சேது சொன்னது, "என்னால் முடியாது'' என்று; மாதுவும் "என்னால் முடியாது'' எனச் சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

பொன்குரலே, நெற்கதிர்களை அடித்து நெல் வேறு, வைக்கோல் வேறாக எடுத்தது.

அந்த நெல்லை அரிசியாக்க வேண்டும். நெல் அரைக்கும் ஆலைக்கும் எடுத்துச்செல்ல வேண்டும். இதை யார் செய்வது?

மீண்டும் சேதுவையும் மாதுவையும் பொன்குரல் கூப்பிட்டது.

''நெல்லை எடுத்துச் சென்று அரிசியாக்கி வாருங்கள்'' என்றது.

''என்னால் முடியாது'' சேது சொன்னது.

"என்னாலும் முடியாது" மாது சொன்னது.

"அப்படியா நானே எடுத்துப்போய் வருகிறேன்'' எனப் பொன்குரல் கூறியது.

சுண்டெலிகள் துள்ளிக் குதித்து ஓடி மறைந்தன.

ஆலையிலிருந்து அரிசி வந்துவிட்டது.

அரிசியைச் சோறாக்க வேண்டும்.

பொன்குரல் சேதுவையும் மாதுவையும் கூப்பிட்டு ''இப்போது உங்கள் இருவரில் யார் அடுப்பு மூட்டி, இந்த அரிசியைச் சோறாக்குவது?'' என்று கேட்டது.

''இந்த வேலையெல்லாம் எனக்கு வேண்டாம்'' என்றது சேது.

அதேபோல மாதுவும் "அடுப்பு மூட்டுவதெல்லாம் யார் செய்யும் வேலை? என்னாலும் முடியாது" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டது.

பொன்குரலே விறகுகளைப் பொறுக்கிவந்து, நெருப்பை உண்டாக்கி, அடுப்பைப் பற்றவைத்து சோறும் ஆக்கியது.

அப்போது சேதுவும் மாதுவும் ஓடிவந்தன.

''ஐயோ பசிக்கிறது சோறு" என்றது சேது.

"எனக்கும் பசி தாங்க முடியவில்லை'' என்றது மாது.

''இருங்கள்... இருங்கள்... என்ன அவசரம் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்" என்றது பொன்குரல்.

"நெற்கதிர்களை யார் கொண்டு வந்தது?" பொன்குரல் கேட்டது.

"நீதான்" ஒரே குரலில் இரண்டு சுண்டெலிகளும் சொல்லின.

''சரி யார் நெல்லை அடித்தது?"

"நீதான். அதில் என்ன சந்தேகம்?'' மெல்லிய குரலில் பதில் வந்தது.

''சரி... யார் நெல் அரைக்கும் ஆலைக்குச் சென்று அரிசியாக்கி வந்தது" சேவல் கேட்டது.

"நீதான்" எலிகள் இன்னும் மெல்லிய குரலில் பதில் சொல்லின.

''யார் அடுப்புப் பற்றவைத்து சோறு சமைத்தது?" சேதுவும் மாதுவும் பேசவில்லை. மௌனம் சாதித்தன.

அவற்றிற்கு அங்கு நின்று முகம் காட்ட முடியவில்லை. ஓடி மறைந்தன.

உழைப்பவர்களுக்குத்தான் உண்ண உரிமையுண்டு.

## கொக்கு



கொக்கு வெள்ளைக் கொக்கு
குளத்தங் கரைக் கொக்கு
திக்கு எட்டும் சென்று
திரும்பி வரும் கொக்கு

வாடி நிற்கும் கொக்கு
வளைந்து நிற்கும் கொக்கு
நாடி நின்று மீனை,
நையும் இந்தக் கொக்கு

காலைத் தூக்கி நின்று
கடவுள் அருளைக் கண்டு,
வேளை மூன்றும் உண்டு
வணங்கும் இந்தக் கொக்கு

## மன்னர் கற்ற பாடம்



அந்த மன்னர் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டார். அரண்மனையில்தான் எனக்கு எத்தனை உபசரிப்புகள், சேவைகள் புரிந்திட ஏராளமான சேவகர்கள்! என் உடலில்தான் நவரத்தினக்கற்கள் பதித்த நகைகள், பட்டாடைகள் அப்பப்பா...! இப்படி நான் மன்னராக வாழ்வதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். வேறு யாருக்கும் இப்படி ஓர் வாழ்வு அமையாது என்றே எண்ணத் தோன்றுகிறது! என மனதுள் அடிக்கடி தனக்குக் கிடைக்கப்பெற்ற வாழ்க்கையை நினைத்து உள்ளம் பூரிப்படைவார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய பரிவாரங்களுடன் பக்கத்து நாட்டில் நடைபெறும் விழா ஒன்றிற்குப் புறப்பட்டார்.

ஒரு கிராமத்தின் வழியாக வருகின்றபோது அக்கிராம எல்லையில் முனிவர் ஒருவர் அமர்ந்திருக்க, அவரைச் சுற்றிலும் கிராம மக்கள் அமர்ந்திருக்கின்ற காட்சியைக் கண்டார்.

முனிவர் அக்கிராம மக்களுக்கு உபதேசங்களைக் கூறிக்கொண்டிருக்க, அந்த உபதேச மொழிகள் மன்னர் காதுகளிலும் விழுந்தது.

மன்னர் தனது பரிவாரங்களுடன் முனிவரை வணங்கிநின்றார். கட்டாந்தரையில் மரத்தடியில் மிக சாதாரணமாக மலர்ந்த முகத்துடன் இருக்கும் அவரைக் கண்டு வியப்படைந்தார். பணிவோடு ''சுவாமி! இந்த உலகில் நான்தான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன் என நினைத்தேன்! ஆனால் தங்களின் முகத்தைப் பார்க்கின்றபோது எனக்கு அது தவறு என்று தோன்றுகிறது'' என்றார்.

''உண்மைதான்! அரண்மனையில் உனக்கு கிடைக்கும் மகிழ்ச்சி போலியானது! நிரந்தரமற்றது! நீ அரச பதவியை துறந்துவிட்டால் அல்லது இழந்து விட்டால் அவைகள் எல்லாம் உன்னை விட்டு ஓடிவிடும்.

மற்றவர்கள் அறவழியில் வாழ்ந்திட உபதேசம் செய்துவரும் எளிமையான வாழ்க்கையே நிலையான மகிழ்ச்சியைத் தரும்'' என்றார் முனிவர்.

**கருத்து:-எளிமையான வாழ்க்கையில்தான் நிலையான மகிழ்ச்சி இருக்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.
– மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நம் தமிழ் அரசியல்வாதிகள் வன்னி மரத்தில் பூசை செய்ய வேண்டும்

இன்று விஜயதசமி. நவராத்திரி விரதம் முடிவுற்று பத்தாம் நாள் தசமியன்று தேவி பராசக்தி சிங்கவாகனத்தில் துர்க்காதேவியாக எழுந்தருளி மகுடாசுரன் என்ற அசுரனை வதம் செய்து வெற்றி கொண்ட நாள். இந்நாளே விஜயதசமி என்றாயிற்று.

வீரம், செல்வம், கல்வி என்பவற்றுக்குரிய தெய்வங்களை வணங்கி வழிபடுகின்ற சிறப்பு இந்து சமயத்தில் உண்டு.

அதிலும் கல்வி என்பதைத் தெய்வமாகப் போற்றுகின்ற மிக உயர்ந்த வழிபாட்டுப் பண்பாடு இந்து சமயத்தில் வியாபித்துள்ளது.

கல்வித் தெய்வமாக சரஸ்வதியை ஆவாகனம் செய்து வீடுகள் தோறும் சரஸ்வதி தேவியை வணங்கி வழிபட்டு கல்வியைத் தா என்று வேண்டுதல் செய்கின்ற நடைமுறை நம்மிடம் உள்ளதெனும்போது, கல்விக்கு நாம் வழங்கிய முக்கியத்துவம் எத்துணை உயர்வானது என்பதைப் புரிய முடியும்.

தவிர விஜயதசமியில் ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்கின்ற பண்பாடும் உண்டு.

இவற்றுக்கு மேலாக விஜயதசமியில் ஆயுத பூசை செய்கின்ற நடைமுறையும் நம் மக்கள் சமூகத்தில் விரிந்து பரவியுள்ளது.

தொழிற்சாலைகள், வேலைத்தளங்கள், நிறுவனங்களில் தொழில்புரிவோர் தத்தம் பணிநிலைக்கு உதவுகின்ற இயந்திரங்கள், கருவிகள் என்பவற்றை வைத்து அவற்றுக்குப் பூஜை செய்து வழிபடுகின்ற காரணத்தால் விஜயதசமியை ஆயுத பூசைக்குரிய நாள் என்றும் அழைக்கும் வழமை உண்டு.

உண்மையில் விஜயதசமியில் ஆயுதபூஜை செய்வதற்கும் காரணம் உண்டு.

துரியோதனன் தலைமையிலான கௌரவர்களால் காட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாண்டவர்கள் வனவாசத்தின்போது தம்வசம் இருந்த ஆயுதங்களை வன்னி மரத்தின் கீழ் புதைத்து வைத்துவிட்டு காடேகினர்.

14 ஆண்டுகள் வனவாசம் முடிய நாடு திரும்பிய பாண்டவர்கள் வன்னி மரத்தின் கீழ் தாம் வைத்த ஆயுதங்களை எடுத்து கழுவித் துடைத்து அவற்றுக்கு பூசை செய்து கையிலெடுத்துக் கொண்டனர்.

இந்நாள் விஜயதசமி என்பதால் விஜயதசமியில் ஆயுதபூசை செய்கின்ற வழமை ஏற்படலாயிற்று.

ஆயுத பூசையின் தத்துவம் அற்புதமானது. வனவாசம் முடித்த பாண்டவர்கள் குருசேத்திரப் போரில் கௌரவர்களை எதிர்கொள்ளப் போகின்றனர்.

இங்கு தர்மம் வெல்வதற்கு ஆயுதங்களே உதவுகின்றன என்பதால் ஆயுத பூசை செய்து தர்மத்தை நிலைநாட்டத் தயாராகுவது ஒரு தத்துவம்.

மாறாக தொழிற்சாலைகளில் நாம் செய்யும் ஆயுத பூசை செய்கின்ற தொழிலே தெய்வம். அதற்கு உதவுகின்ற கருவிகளை வணங்குவதன் மூலம் அவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தவும் பக்குவப்படுத்தவும் எம்மை நாம் தயாராக்குவதற்காகக் கருவிகளைக் கடவுளாக மதிக்கின்ற ஏற்பாடு அடுத்த தத்துவம்.

எதுஎவ்வாறாயினும் எங்கள் அரசியல்வாதிகளின் மனங்களும் மாயையில் – அதர்மத்தில் சிக்குண்டு இருளில் மூழ்கியுள்ளது. இதை தட்டி சுத்தப்படுத்தி எங்களை நம்பிய தமிழ் மக்களுக்காக வாழுவோம் என்று உறுதி பூணுகின்றதாய் நம் அரசியல்வாதிகள் வன்னி மரத்

## ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக தாக்கல்செய்யப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுஅறிவித்துள்ளது.

இந்நிலையில் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கு வழங்கப்பட்ட நேரத்தில் இரண்டு எதிர்ப்புகள் முன் வைக்கப்பட்ட போதிலும் அவை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் நடவடிக்கை நேற்று காலை 9 மணி முதல் 11 மணி வரையில் இடம்பெற்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு 41 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில் 35 வேட்பாளர்கள் மாத்திரமே வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

சமல் ராஜபக்ஷ மற்றும் குமார வெல்கம உட்பட 6 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்த போதிலும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## எவ்வித தீவிரவாத சக்திகளுக்கும் நாட்டில் இடமளிக்கப் போவதில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

எவ்வித தீவிரவாத சக்திகளுக்கும் நாட்டில் இடமளிக்க போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பேருவளை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர், இன ரீதியாக இயங்கும் தலைவர்களால் நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாது என்றும் கூறினார்.

பாதுகாப்பை உறுதி செய்வதைப் பற்றி பேசும் பெரும்பான்மையான தலைவர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை அமைப்பது தொடர்பாகவே பேசிவருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஆனால் நாட்டில் இராணுவ இருப்பை அதிகரிக்காமல், நிலையான பாதுகாப்பை தேசிய மக்கள் சக்தி உறுதி செய்யும் என அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு எந்தவொரு தீவிரவாத சக்திகளுக்கும் தீவிரவாத செயற்பாடுகளை முன்னெடுக்கும் குழுவும் நாட்டிற்குள் செயற்பட தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார். (ம-3)

## ரயில்வே ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால்

### 19 கோடி ரூபாய் இழப்பு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் தொடர்ச்சியாக 12 நாட்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் ரயில்வே திணைக்களத்துக்கு 19கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த தகவலை ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ளது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து ரயில்வே இயந்திர இயக்குநர்கள், கட்டுப்பாட்டாளர்கள், பாதுகாவலர்கள் உள்ளிட்டோர் தொடர்ச்சியாக 12 நாட்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ரயில்வே திணைக்களத்துக்கு 19 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

செய்யும் தொழிலில் எதுவுமே சிறுமையானது கிடையாது. அது செய்யப்படும் விதத்தில்தான் உயர்வு உள்ளது. -ஓர் அறிஞர்

## நவராத்திரி பாமாலை

### இன்று விஜயதசமி



### முத்தேவிகளே

நவராத்திரி நாயகியே முத்தேவிகளே
நலமோடு எம்மை வாழவைக்கும் நவசக்திகளே
மூன்று தேவிக்கும் ஒன்பது விழா நவராத்திரி விழா
மூவுலகையே அதிரவைத்த பேரின்பவிழா
தீய எண்ணங்களை போக்குபவளே
தீச்சுடர் ஏந்தியவளே
செல்வத்தில் குடி கொள்பவளே
செல்வத்தை அள்ளித் தருபவளே
ஏட்டுடன் இருப்பவளே
ஏழைமுதல் பெரியோர் வரை கல்வி உரைப்பவளே
முத்தேவிகளுக்கும் இது முதல் விழா!
முழுவதும் ஆயுதபூஜையுடன் இந்தவிழா
[illegible]
யா/ றிபேர்க் கல்லூரி

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைவன் என்னும் காந்தக்கல்



ஓர் அழகிய முகத்தைக் கண்டு ஒருவன் அதன்பின் ஓடுகிறான் என்றால் ஒழுங்காக அமைந்த பிடியளவு பரமாணுக்களா அவனைக் கவர்ந்தன? இல்லவே இல்லை. அந்த ஜடப் பரமாணுக்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு ஒரு தெய்வீகக் கவர்ச்சி, ஒரு பேரன்பு விளையாடுகிறது. மூட மனிதனால் இதை அறிய முடிவதில்லை. இருந்தாலும் அந்தக் கவர்ச்சியில்தான் அவனும் அறிந்தோ, அறியாமலோ ஈர்க்கப்படுகிறான். அதனால் சிற்றின்பக் கவர்ச்சிகளில்கூட தாங்கள் கவரும் ஆற்றலை அப்பரமனிடம் இருந்தே பெறுகின்றன.

என் அன்புக்கு உகந்தவளே! எந்த ஒரு கணவனும் அவன் கணவன் என்பதற்காக விரும்பப்படுவதில்லை. ஆன்மாவிற்காகவே அவனுள் சுடர்விடும் இறைவனுக்காகவே காதலிக்கப்படுகிறான். இதைக் காதல் மனைவியர் அறிந்திருக்கலாம். அல்லது அறியாமல் போகலாம் ஆனால் உண்மை என்னவோ இதுதான்.

அதேபோல் என் அன்புக்குரியவளே! யாரும் மனைவிக்காக மனைவியை விரும்புவதில்லை. அவளிடம் குடி கொண்டிருக்கும் ஆன்மப் பிரகாசத்திற்காக நேசிக்கப்படுகிறாள். அதுபோலவே குழந்தையிடம் ஆசை காட்டுவதும் இவ்வுலகில் வேறு எந்தப் பொருளையும் விரும்புவதும் அவற்றுக்காக அல்ல. அவற்றுள்ளே வீற்றிருக்கும் இறைவனுக்காகவே.

இறைவன் ஒரு பெரிய காந்தக்கல். நாமெல்லாம் இரும்புத்துகள்கள். அவன் எப்போதும் நம்மைக் கவர்ந்தபடி இருக்கிறான். நாமும் அவனை அடையப் பாடுபட்டு வருகிறோம். நமது இந்தப் பாடுகளெல்லாம் உண்மையில் சுயநலத்திற்காக அல்ல.

முட்டாள்களுக்குத் தாங்கள் என்ன செய்கிறோம் என்பது தெரிவதில்லை. தம் வாழ்நாளில் அவர்கள் செய்ய வேண்டிய வேலை அப்பெரிய காந்தக் கல்லை அணுகுவதுதான்.

வாழ்க்கையில் ஏற்படும் கொடிய போராட்டங்கள், கொந்தளிப்புக்கள் அனைத்தும் முடிவில் இறைவனை அடைந்து அவனுடன் ஒன்று கலப்பதே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி விக்னேஸ்வராவில் பழைய மாணவர் விளையாட்டு நிகழ்வுகள்







யாழ். விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கம் ஓய்வுநிலை மாகாண கல்வி பணிப்பாளர் வை.செல்வராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

போட்டிகளில் வெற்றியீட்டிய பழைய மாணவர்களுக்கு பெறுமதியான தங்கப்பதக்கமும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

பழைய மாணவர்களின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பிரதம விருந்தினர் பழைய மாணவர் சங்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை இந்த நிகழ்வின் போது வழங்கியுள்ளார். (க-60)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்








வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ண ஆரம்ப நாள் நிகழ்வு ஆவரங்கால் நடராஜா மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. போட்டியினை சிறப்பிப்பதற்காக இலங்கை அணியின் வலைப்பந்தாட்ட வீராங்கனைகளான செல்வி சிவலிங்கம் தர்ஷினி மற்றும் எழிலேந்தினி சேதுகாவலர் ஆகியோரும் வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், இந்திய திரைப்பட இயக்குநர்களான பாரதிராஜா, அமீர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.(க-60)

# மூன்றாம் இடத்தை தனதாக்கியது வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி

சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் லக்கிஸ்ரார் அணி 02: 00 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது.

லக்கிஸ்ரார் அணி சார்பாக ருஜிகன் இரு கோல்களை பெற்றுக் கொடுத்தார். (க)



# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது தேவன்பிட்டி சென்.சேவியர் அணி



சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் சென். சேவியர் அணி 02:00 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

சென்.சேவியர் அணி சார்பாக றொமி, ரகுவரன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டம்...

வரத்து அமைச்சர், சம்பள நிர்ணய சபையின் தலைவர் ஆகியோருடன் ரயில்வே தொழிற்சங்க பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்தே வேலை நிறுத்த போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்று மைத்திரிபால சிறிசேனவின் வாசஸ்தலத்தில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை முடித்து கொண்ட ரயில்வே தொழிற்சங்க பிரதிநிதிகள் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சம்பள நிர்ணய சபையின் தலைவர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதனை அடுத்தே வேலை நிறுத்தத்தை கைவிடுவதென அவர்கள் தீர்மானித்தனர். (ம-3)

## பேரணிகள்...

களுக்கு பேரணிகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீறி பேரணிகள் நடத்தப்பட்டால் நீதிமன்றுக்கு அறிவிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில், வேட்பு மனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் 35 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இரண்டுக்கு எதிர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளதனையடுத்து அவை இரண்டும் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## சமல் ராஜபக்ஷ...

பக்ஷவின் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படாத நிலை ஏற்பட்டால் மாற்று ஏற்பாடாக, போட்டியிடுவதற்காக சமல் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை கட்டுப்பணம் செலுத்தியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, கோத்தபாய ராஜபக்ஷவுக்கான நெருக்கடி தீர்ந்திருந்தது.

எனினும், அவருக்கு சட்ட நெருக்கடிகள் ஏற்படக் கூடும் என்பதால், சமல் ராஜபக்ஷவும் வேட்புமனு தாக்கல் செய்வார் என்று கூறப்பட்டது.

இருந்த போதிலும் நேற்று சமல் ராஜபக்ஷ தனது வேட்புமனுவை தாக்கல் செய்யவில்லை. (ம-3)

## கொள்கை மாறு...

இருந்தாலும், தான் அவரை மதிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ள நிலையில், நேற்று திங்கட்கிழமை குறித்த தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

அந்த வகையில், தேர்தல்கள் ஆணையகத்தில் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் எதிர்பாராத விதமாக சந்தித்துக் கொண்டனர்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ, குறித்த சந்திப்பு தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் "ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை தேர்தல்கள் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்த வேளை என தமது சந்திப்பை நினைவு கூர்ந்தேன்.

போட்டியாளர்கள் வேறுபட்ட கொள்கைகள் மற்றும் நடத்தைகள் உடையவர்களாக இருக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவர் மரியாதை அளிக்க வேண்டும் என்பதே எனது உண்மையான நம்பிக்கை எனவும் வெற்றி பெறுவது நிச்சயமாக இலங்கையரே" எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதித் தேர்...

யுள்ள நிலையில், 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் இருவர் தமிழர்கள்.

கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களில் ஆறு பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவில்லை. (ம-3)

## நீராவியடி...

முறையீடு மற்றும் மீளாய்வு மனுக்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று எடுக்கப்பட்டிருந்தன.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரம் தொடர்பான மேல்முறையீடு மற்றும் மீளாய்வு வழக்குகள் தொடர்பிலேயே மேன்முறையீட்டு வழக்கு அந்த வழக்கினுடைய முதலாவது தரப்பினராகிய புத்த பிக்கு மரணம் அடைந்த காரணத்தினால் அந்த வழக்கின் மேன்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

அதே விடயம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவும் புத்த பிக்குவின் மரணத்தோடு அவருடைய மரண சான்றிதழ் நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையிலே இரத்து செய்யப்பட்டது. (ம-3,299)

## ராஜபக்ஷ அதி...

கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற கொழும்பு மாவட்ட கட்சி உறுப்பினர்களை சந்தித்து உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த 10 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு முடியவில்லையெனவும், ஏன் அவ்வாறு செய்ய முடியவில்லையென்பதையும் பொதுஜன பெரமுன கட்சி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-3)

## சிவாஜிலிங்க...

சிவாஜிலிங்கத்திற்கு எதிராக விசாரணையொன்றை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பு தீர்மானித்துள்ளது.

ரெலோ அமைப்பின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிடும் போது, "ஜனாதிபதித் தேர்தலில் ரெலோ அமைப்பின் சார்பாக யாருமே போட்டியிடக் கூடாது என தீர்மானம் எடுத்திருந்தபோதும், எம்.கே. சிவாஜிலிங்கம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

இது எமது கொள்கைக்கு முரணப்பட்ட செயலாகும். கட்சியையும் அவமதிக்கும் விடயம்." என குறிப்பிட்டார்.

இருப்பினும், கட்சியை விட்டு விலகிதான் சுயாதீனமாக போட்டியிட உள்ளதாக எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியதன் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3,10)

## பொது...

மகிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

இன்று கட்சியின் பாராளுமன்றக்குழு கூட்டம் இடம்பெறுமென்றும், அதில் இந்த விடயத்தை விவாதித்த பின்னர், கூட்டணி அறிவிப்பு வெளியாகுமென்றார். (ம-3)

## வெற்றி...

யும் எதிர்க்கட்சி தலைவருமான மகிந்த ராஜபக்ஷ கூறுகையில்,

தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் எவ்வித மறுப்பும் இன்றி இணக்கம் தெரிவித்துள்ளோம். சுயாதீனமான முறையில் தேர்தல் இடம்பெற்றால் மாத்திரமே நாட்டு மக்கள் தமக்கான தலைவரை தெரிவு செய்வார்கள்.

எந்நிலையிலும் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆணைக்குழு இடமளிக்காது என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

# வாணிவிழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விஜயதசமி பூசைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஞ)

ஜனாதிபதித் தேர்தல்

# விதிமுறை மீறினால் குடியுரிமை இரத்து

மகிந்த தேசப்பிரிய

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகளுக்கு அமைய செயற்படவேண்டியது அனைத்து வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குள்ள பொறுப்பு என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னர் வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

இந்த விதிமுறைகள் மீறப்பட்டால், அரசியலமைப்புக்கு அமைய குடியுரிமையை இரத்துச் செய்யும் அளவுக்கு தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து மக்களும் தங்களது பொறுப்புக்களை உணர்ந்து விதிமுறைகளுக்கு உட்பட்டு செயற்பட்டால் இந்த தேர்தலை நீதியான முறையில் நடத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டை விடவும் இரண்டு மடங்கு பெரிய வாக்குச்சீட்டை அச்சிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், வாக்குப் பெட்டிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் கூறியுள்ளார். (ஞ)

## நாட்டைக் கட்டி...

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ அவருடைய தாயாரான ஹேமா பிரேமதாஸ, அமைச்சர்களான மனோ கணேசன், சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜுபுர் ரஹுமான், கபீர் ஹாசீம் ஆகியோர் புடைசூழ ஆதரவாளர்கள் இருந்த இடத்திற்கு சென்றனர். (ம-3)

## ஜனாதிபதித்...

எமது அரசாங்கத்தின் எதிர்கால திட்டமிடல்கள் அனைத்தும் முழுமையாக மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டுள்ளது. எமது ஆட்சியில் அபிவிருத்திகள் உட்பட அனைத்து துறைகளும் பலப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நேற்று ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அரசியல் கட்சி...

பிறைற் இன் விடுதியில் நடைபெற்ற இச்சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் கட்சிகள் இடையே ஒருமித்த முடிவை எடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டது.

இதில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் வழங்கியுள்ளனர்.

நேற்றைய சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன் மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இவர்கள் கடந்த கூட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)


மஹஜன சம்பத
திகதி 2019/10/07
சீட்டிழுப்பு இலக்கம் 4022
K 5 3 5 4 5 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2263
M 23 58 59 66

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2019/10/07
சீட்டிழுப்பு இலக்கம் 1467
08 01 21 29 39 65 08

மெகா பவர்
திகதி 2019/10/07
சீட்டிழுப்பு இலக்கம் 0442
A 26 40 42 44 79

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1054
சீட்டிழுப்பு திகதி 07.10.2019 திங்கள்
N 06 42 46 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,296,648/=

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 754
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,995,060/-
22 63 75 77 F
5059

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3245 திகதி: 2019.10.07 திங்கட்கிழமை
09 15 22 48 X 41
63,873,985/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07/10/2019 வெற்றி வாரம் 2640 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் கன்னி 02 28 35 54
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,415, 810
2019/10/08 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பணிகளில் 7500 பேர்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான கண்காணிப்பு பணிகளில் வரலாற்றில் முதற்தடவையாக 7500 பேரை ஈடுபடுத்தவுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

எந்தவொரு தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலை அடுத்து வன்முறைகள் மற்றும் தேர்தல் விதிமுறைகளை மீறிய செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் கபே அமைப்பின் பதில் நிறைவேற்று பணிப் பாளர் அஹமட் மனாஸ் தெரிவித்துள் ளார். (ஞா)

# கன்னியா ஆலயப்பகுதியில் கட்டிட வேலை ஆரம்பிக்க தடை

(திருகோணமலை)

திருகோணமலை கன்னியா வென்னீர் ஊற்று பகுதியில் உள்ள தொல்பொருள் திணைக்களம் உரிமை கோரும் பிள்ளை யார் கோயில் அமைந்துள்ள பிரதேசத்தில் கோயில் அல்லது பௌத்த விகாரை அமைப்பதோ அல்லது திருத்த வேலைகள் செய்வதற்கோ வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

திருகோணமலை மாவட்ட மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இந்த உத்தரவை பிறப்பித் துள்ளார்.

நேற்று இடம் பெற்ற வழக்கு விசாரணை முடிவில் அவர் இந்த உத்தரவை வழங்கினார்.

மேலும் வெந்நீர ஊற்று பகுதிக்கு விஜயம் செய்பவர்களுக்கு மட்டும் டிக்கட் விற்பனை செய்யவும் தொல்பொருள் திணைக்களத் திற்கு அனுமதியும் நீதிபதியால் வழங்கப் பட்டது.

குறித்த வழக்கு இம்மாதம் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளபட உள்ளது. (ஞா)

## புலமைப் பரிசில் பரீட்சையில்

# வடக்கில் 2ஆம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மாணவன்

(யாழ்ப்பாணம்)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் கிளி / கோணாவில் காந்தி ஆரம்பவித்தியாலய மாணவன் இராசலிங்கம் கேதுசனன் 194 புள்ளி களைப்பெற்று வட மாகாணத்தில் இரண்டாம் இடத்தைப்பிடித் துள்ளார். (ம-3)


**கணித ஆசிரியர் தேவை**

க.பொ.த சாதாரணதரம் மற்றும் தரம் 5 மாணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்க கூடிய உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவில் கல்வி கற்றவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 217 4741

(563)



**வாங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்**

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(573)


## ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து

# பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெறுவது நிச்சயம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர், பாராளுமன்றத் தேர்தலிலும் தாங்கள் வெற்றிபெறுவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சியில் 10 வருடகாலம் எரிபொருட்களின் விலைகளை ஏன் குறைக்க முடியாதிருந்தது? மக்களின் பணம் ஏன் சுரண்டப்பட்டது. அதுமாத்திரமல்ல, அந்த காலப்பகுதியில் பால்மாவின் விலை எவ்வாறிருந்தது? இன்று எவ்வாறுள்ளது என்று தான் கேள்வி எழுப்புவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களின் அடிப் படையிலும் மக்கள் வாக்களிப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டி னார்.

கடந்த காலத்தில் ஏன்தங்களால்பொருட் களின் விலைகளைக் குறைக்க முடியாமல் போனது என்பதை மொட்டு சின்னத்தின் வேட்பாளர் அறிவிக்க வேண்டும் என பிரத மர்இதன்போது குறிப் பிட்டுள்ளார். (ம-3)


திரு.ஷாம்சன் அவர்களின் நேரடி 3 மாத பயிற்சிநெறி

**சிங்களம்**

அரச, தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகள் வியாபார தொடர்பாளர்கள் மற்றும் சிங்களம் பேச விரும்புவோருக்கானது.

சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் : சனிக்கிழமை

1. காலை 11.00 2.மாலை 05.00

**ஆங்கிலம்**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 12.10.2019 சனி

1. காலை 10.00-12.00 2. மாலை 03.00-05.00

- நேரடியாக அலுவலகத்தில் முன்பதிவுகளை மேற்கொள்ளமுடியும் -

SAAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, (சுண்டிக்குளி வித்தியாலயம் முன்பாக) யாழ்நகர்.

021 222 4282 076 3143 751



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK - 550 /-Kg
கனடா - 950 /-Kg
ஜேர்மனி - 650 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
இத்தாலி - 700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

(C-7339)



**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2021ல் நீங்களும் அமெரிக்காவில்..

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 | புதுக்குடியிருப்பு 0764550673 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 | மருதங்கேணி 0764550671 |

V2 Travels www.facebook.com/v2tan

(C-78



**புதிய ஆங்கிலப் பாடநெறி சனி, ஞாயிறு தினங்களில்**

**DIPLOMA IN ENGLISH (06 மாதங்கள்)**

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 3.00 - 05.30 வரை

ஆரம்பம் : 12.10.2019 மாலை 3.00 மணி

(16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி)

E-CITY

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 7106 / 077 340 0418 / 077 061 5242 / 077 492 4166

web: www.ecitycollege.lk

(C-7814)



**அகரம் கல்வி நிலையம்**

**AHARAM EDUCATION CENTER**

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**தரம் 06-O/L**

**தமிழ், ஆங்கில**

மொழி மூல வகுப்புக்கள்

புதிய கல்வியாண்டு 2020

அனுமதிகள்

08/10/2019 விஜயதசமி தினத்தில் இருந்து வழங்கப்படும்

(அலுவலக நேரத்தில் பெறுக்கொள்ள முடியும்)

நன் நாளும் நன் நேரமும் நல்லவைகளின் ஆரம்பத்திற்காகவே வகுக்கப்பட்டன.

ஜெயம் தரும் விஜயதசமியில் எங்கள் பிள்ளைகளின் கல்விப்பயணத்தை ஆரம்பிப்போம்.

" அகரம் எம் தேசத் குழந்தைகளின் நேர்மிகு இலக்கியம் "

(C-7816)



**சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி**

**யாழ்ப்பாணம், வவுனியா**



ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்

காலம் - ஒக்டோபர் 13ம் திகதி ஞாயிறு மாலை 3.30
இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்), செல்வா பெலஸ் (A/C)

காலம் - ஒக்டோபர் 14ம் திகதி திங்கள் மாலை 6.30
இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K... (C-7794)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.